337

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



2 அணா

# செய்திகள்

## பி. ஸி. ஜி.

க்ஷயரோகம் வராமல் தடுக்க, பி. ஸி. ஜி. என்ற ஊசி போட்டு வந்தார்கள். சிலர் இது க்ஷயரோகம் வராமல் தடுக்காது; அத்துடன் இது அபாயகரமானது என்று கூறினர்கள். ''இல்லை; இது தடுக்கும். நல்லது. அமெரிக்க நிபுணர் டாக்டர் பாமர் சொல்லியிருக்கிறுர்'' என்று எதிர்த் தரப்பில் சொல்லப்பட்டது. இப்போது அந்த அமெரிக்க நிபுணரே, ''இது அபாயகரமானதல்ல என்று கருத முடியாது'' என்று தம் கருத்தை மாற்றிக்கொண்டு, ஓர் அறிக்கையும் வெளியிட்டிருக்கிறுர். மற்ெருரு ஸ்வீடிஷ் நிபுணரும் இதே கருத்தைச் சொல்லுகிறுர். சர்க்கார் இதை மீண்டும் ஆலோசிப்பார்கள் என்று தோன்றுகிறது.

## செப்டம்பர் 11

இந்தச் செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் நாளைக் கொண்டாடுகிருர்கள். பாரதியார் இறந்த நாளைத்தான் நாம் இப்போது வழக்கமாகக் கொண்டாடி வருகிருேம். சிலர் அதற்குப் பதிலாக அவர் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்று கூறி வருகிருர்கள். சிலர் கொண்டாடியும் வருகிருர்கள். மகாகவி இறந்த அதே நாளில் மற்ெருரு பெரியவர் பிறந்திருக்கிருர். அவர்தான் தமிழ் நாட்டில் இப்போது பூமிதான யாத்திரை செய்துவரும் விேனுபா பாவே. அந்த நாளன்று அவரிடம் இரண்டு கிராமங்களைத் தானமாக அளிக்க, கோவை ஜில்லா வாசிகள் முயன்று வருகிருர்கள்.

## செவ்வாய்க் கிரகம்

பூமிக்குச் சமீபமாக இருக்கும் கிரகங்களில் செவ்வாயும் ஒன்று. அதன் தென் பகுதியில் ஏதோ வெள்ளையாகத் தெரிகிறது என்று ரஷ்ய, அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகிருர்கள். வெள்ளையாகத் தெரிவது பனிக் கட்டிகளாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் ஊகிக்கிருர்கள்.

## காகித டிக்கட்டுகள்

இப்பொழுது ரெயில்வே ஸ்டேஷன் போய், நாம் போக வேண்டிய ஊருக்கு ஒரு டிக்கட் (பணம் கொடுத்துத்தான்) கேட்டால் நீண்ட சதுரமான ஒரு மஞ்சள் டிக்கட் ஒன்றைத் தருகிருர்கள். இப்பொழுது அந்த அட்டை கிடைப்பது அரிதாக இருப்பதால், அவசரகால ஏற்பாடாக இப்போதைக்குக் காகிதத்திலேயே டிக்கட் அச்சடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்துகொண் டிருக்கிருர்களாம்.

## நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்

நெய்வேலிப் பிரதேசத்தில் 20 கோடி டன் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் என்று மதிப்பிட்டிருக்கிருர்கள். இதை வெட்டி எடுப்பது முடியுமா, முடியாதா என்று இதுவரை பரீட்சை செய்து வந்தார்கள். நிலக்கரிப் பகுதிக்குக் கீழே ஓடும் நீரின் பெருக்கு அத்தனை அதிகமாக இருக்கிறது. இப்பொழுது பரீட்சை செய்து பார்த்த பிறகு இந்தச் சுரங்க வேலையைத் தொடங்க இந்திய சர்க்கார் தீர்மானித்துவிட்டார்கள். 1960 முதல் நிலக்கரி எடுத்தலும், மின்சார, ரசாயன உர உற்பத்தித் தொழில்களும் தொடங்கும்.

## லெனின் பரிசுகள்

இதுவரையில் ரஷ்யாவில் சர்வதேச சமாதானப் பரிசுகள் எல்லாம் 'ஸ்டாலின் பரிசுகள்' என்று கொடுக்கப்பட்டு வந்தன. இனி இதை 'லெனின் பரிசுகள்' என்று வழங்க, ரஷ்யா தீர்மானித்துள்ளது.

கண்ணன்



## பொருளடக்கம்

**மலர்: 7** **இதழ்: 18**

**15-9-'56**

| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| பாரதியே! | .. | 3 |
| பொழுது போக்கு | .. | 4 |
| சைனா சு - சூ! | .. | 5 |
| தெனாலிராமன் | .. | 11 |
| கலைஞன் கானதேவன்! | .. | 13 |
| சகல கலாவல்லவர் | .. | 18 |
| பகல் தூக்கம் | .. | 21 |
| பத்துரூபாய் நோட்டு | .. | 24 |
| பாலர் கவியரங்கம் | .. | 28 |
| இளவரசி குமுதவல்லி | .. | 29 |
| அரசனும் வேலைக்காரனும் | .. | 33 |
| புலிக்குட்டி | .. | 37 |
| வேலைக்கார ராஜாசாமி | .. | 39 |
| செய்திகள் - 2 - அட்டை | | |
| பேனா நண்பர்கள்- | 3 - அட்டை | |

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## ஏமாந்தது யார்?

சொக்கலிங்கம் செட்டியாரைப் போன்ற கருமி உலகத்திலேயே கிடையாது. அவரிடம்தான் வேலை பார்த்துவந்தான் முனியன். திடீரென்று அவன் மனைவிக்கு உடம்பு சரியில்லை. மாதக் கடைசி. பாவம்; என்ன செய்வான்? வேறு வழியின்றி செட்டியாரிடம் ஐம்பது ரூபாய் கடன் கேட்டான். அவன் எதிர்பார்த்த 'இல்லை' என்ற பதில்தான் உடனே கிடைத்தது.

இரண்டு நாட்கள் கழிந்தன. ஓர் இரவு பஸ்ஸுக்குக் காசு கொடுக்க மனமின்றி நடந்து வந்துகொண்டிருந்தார் செட்டியார். அவருடன் முனியனும் வந்துகொண்டிருந்தான். ஜன நடமாட்டம் இல்லாத ஓர் இடம் வந்தது. திடீரென்று கேடி ஒருவன் முகமூடி அணிந்து அங்கே வந்தான். அவன் செட்டியாரிடம், "ஓய்! உம்மிடம் உள்ள பணத்தை ஒழுங்காகக் கொடுக்கிறீரா; இல்லையேல் இந்தக் கத்தியினால் குத்திவிட்டு எடுத்துப் போகட்டுமா?" என்றான். செட்டியாருக்கு ஒன்றுமே புரியவில்லை. கையிலோ ஐம்பது ரூபாய் இருந்தது. பார்த்தார், திடீரென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே, "டேய் முனியா, கடன் கேட்டாயே நீ, ஐம்பது ரூபாய்! இந்தா! எடுத்துக்கொள்!" என்று அவனிடம் கொடுத்துவிட்டார். முனியன் மறு பேச்சின்றி வாங்கிக் கொண்டான். ஆனால் கேடி சும்மா இருப்பானா? முனியனை மிரட்டிப் பணத்தைப் பிடுங்கிக்கொண்டு சென்றுவிட்டான். செட்டியாருக்கோ ஒரே குஷி! தன் கைப் பணம் போகாமல் தப்பித்ததே என்று. ஏனெனில் முனியனுடைய பணம்தானே பறிபோய் விட்டது? அதை அவன் சம்பளத்தில் பிடித்துக்கொள்ளலாம், அல்லவா! ஆனால், பாவம்! உண்மை யாருக்குத் தெரியும்? முனியனுக்குக் கடன் கொடுக்காததால் அவன் மச்சான் மூலம் கேடி வேஷம் போட்டு மிரட்டி, பணம் வாங்கிச் சென்றான். இப்போது யார் ஏமாந்தது? நீங்களே சொல்லுங்கள்!

—பரணி.

# குழந்தைகளே!

'எங்கள் யோசனைகள்' இப்போது வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன. எல்லாவற்றையும் ஒரு மேஜையில் பார்க்கும்போது எனக்குச் சிரிப்பாகத்தான் வருகிறது.

அடேயப்பா! எத்தனை தினுசான அபிப்பிராயங்கள்! கருத்துக்கள்! ஒன்றுக்கொன்று எத்தனை மாறுதலானவை! அந்தக் கடிதங்களுக்கு மட்டும் வாயும் கையும் இருந்துவிட்டால் அவ்வளவுதான்; என் மேஜையே ரத்தக் களறியாகிவிடும்! நல்ல வேளையாக, அப்படி ஒன்றும் இல்லாமல் இருந்ததோ, பிழைத்தேனோ?

துப்பாக்கிக் கதைகள் வேண்டாம்; வேண்டும். துப்பறியும் கதைகள் வேண்டவே வேண்டாம்; அதுதான் அவசியத்திலும் அவசியமாக வேண்டும். கொலை - கொள்ளை, கொடுமை முதலிய பாதகச் செயல்களைத் தத்ரூபமாக வர்ணித்து எழுதியுள்ள கதைகள் வேண்டாம்; அதனால் பாதகமில்லை. கவிதையை இனி நிறுத்திவிடுங்கள்; கவிதையில் இன்னும் நாலு அதிகமாக வெளியிடுங்கள். கேள்வி - பதில் பகுதி ஒன்றைக் கட்டாயம் வெளியிட்டால்தான் எங்களுக்குத் தூக்கம் வரும்; கேள்வி - பதில் போட்டால் பொது அறிவை வளர்க்கும் கேள்விகள்தான் வேண்டும்; மற்றக் கேள்விக் கிண்டல்கள் வேண்டாம்: வேண்டும்; இப்படியே ஒரு கடிதம் ஒன்றை வேண்டும் என்றும் வேறு ஒரு கடிதம் வேண்டாம் என்றும் அறைகூவி நிற்கின்றன; கெஞ்சுகின்றன: அதட்டுகின்றன; எச்சரிக்கின்றன; நயமாகக் கொஞ்சுகின்றன. முடிவு என்னவென்றால் எனக்கு ஒரே குழப்பம்தான் மிச்சமாக இருக்கிறது. தலைக்கு மேலே, 'வேண்டுமா, வேண்டாமா?' என்று ஒரே கேள்விக் குறி (?) களாகத் தொங்குகின்றன.


ஆனால் அதே சமயத்தில் ஒரே உற்சாகமாகவும் இருக்கிறது. எத்தனையோ புதிய பகுதிகளை ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கையும் எண்ணமும் தோன்றுகின்றன. பெரும்பாலும் நல்ல விஷயங்களை, நல்ல முறையில் தெரிந்துகொள்ளும் ஆவல் அதிகமாக இருப்பது தெரிகிறது.

''எதை ஆரம்பித்தாலும், எதை விட்டாலும் சினிமாப் பகுதி என்று ஒன்றைத் தயவுசெய்து ஆரம்பித்துவிடாதீர்கள்'' என்று ஆசிரியர் ஒருவர் காரண காரியங்களோடு எடுத்துக் கூறியிருக்கிறார். சிறியவர்கள் வேண்டாத, அவசியமில்லாத, கவைக்குதவாத விஷயங்களை மண்டையில் ஏற்றிக்கொண்டு படும் பாட்டையும், படுத்துகிற லூட்டியையும் அவர் ஊரில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லி எழுதியிருக்கிறார். அதைப் படிக்கும்போது கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது. ''ஐயா ஆசிரியர் அவர்களே! உங்கள் யோசனையைக் கவனித்துப் படித்தேன். அவ்வளவும் உண்மை என்று ஒப்புக்கொள்கிறேன். இது விஷயமாக அவசரப்பட்டு அப்படி ஒரு பகுதி எதையும் தொடங்க மாட்டேன்'' என்று அவருக்குப் பதில் எழுதிப் போட்ட பிறகுதான் எனக்கே மன நிம்மதி உண்டாயிற்று.

ஆகவே, உங்கள் யோசனைகளையும் விருப்பங்களையும். நான் தெரிந்து கொண்டு வருகிறேன். அவசியம் நீங்கள் அனைவரும் ஒருமுகமாகப் பாராட்டும் வண்ணம் பத்திரிகையை உருவாக்குவதாக உறுதி கூறுகிறேன்.

ஆயிற்று தீபாவளி வருகிறது. கண்ணன் அதி அற்புதமான முறையில் தயாராகி வருகிறது. விஷயத்திலும் தரத்திலும் நல்ல முறையில் மாறுதலைக் காண்பீர்கள். ஆனால் விலையில் மட்டும் நாங்கள் மாறுதல் எதுவும் செய்யவில்லை. எனவே உங்கள் பிரதிகளுக்கு உங்கள் ஊர் ஏஜெண்டுகளிடம் சொல்லி வையுங்கள். ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களில் உள்ளவர்கள் முன்னதாக நேரே எழுதிப் பணமும் ரூ. 1-6-0 அனுப்பிவிடுங்கள். சந்தாதார்கள் சந்தாத் தொகையை அனுப்பிவிட வேண்டும் என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

—ஆசிரியர்.



# பாரதியே!

'சுராஜ்'

பாட்டால் உணர்ச்சி ஊட்டியவன்
பண்ணால் இன்பம் கூட்டியவன்
நாட்டார் என்றும் மறவாத
நல்ல தமிழ்க்கவி பாரதியே!

அடிமைப் பேயை விரட்டியவன்
அன்பு 'முரசு' கொட்டியவன்
கொடியை உயிராய்ப் போற்றியவன்
'கொஞ்சு தமிழ்க்'கவி பாரதியே!


'கண்ணன் பாட்டு'ப் பாடியவன்
கந்தன் புகழை ஓதியவன்
மண்ணில் தவழ்ந்த பாப்பாவை
மனித னாக்கிய மாகவியே!

துயிலின் தூரலில் கூவியவன்
துறைகள் காணில் சீறியவன்
தாயாம் 'சக்தி' தாள் மறவா
தமிழ்ப்பெரும் கவிஞன் பாரதியே!

# பொழுது போக்கு


ஏ. கே. வேங்கடேசன்


## உங்களால் முடியுமா?



படம் 1: படத்தில் காட்டிய படி இரண்டு சதுரங்களை ஒரே கோட்டினால், வைத்த பேனாவை எடுக்காமல் வரைய வேண்டும். ஒரு கோட்டின் குறுக்கே இன்னொரு கோடு போகக் கூடாது.

படம் 2: (அ)-இல் உள்ளதைப் போல் எட்டு முக்கோணங்களையும், படம் (ஆ), (இ) இவைகளில் உள்ளதைப்போல் தனித் தனியே நான்கு முக்கோணங்களையும் கத்தரித்து எடுத்துக் கொண்டு ஒரு சதுரம் அமைக்க வேண்டும்.




படம் 3: (அ) என்ற சுவருக்குள் படத்தில் காட்டியவாறு மூன்று வீடுகளும், மூன்று குழாய்களும் உள்ளன. (க) விலிருந்து (உ) க்கும், (ங) விலிருந்து (ஆ) வுக்கும், (ச) விலிருந்து (இ) யுக்கும் குழாய்கள் செல்லவேண்டும்.

குழாய்கள் ஒன்றை ஒன்று தொடாமலும், சுவருக்கு வெளியே போகாமலும் இருக்க வேண்டும்.

விடை: 12-ஆம் பக்கம்)



ஆர்வி

சீனனும் ஷங்கங்கும் உள்ளே நுழைந்தபோது, பாரிஸ்டர் வேதாசலம் அமைதியாக ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்தார். மேஜைமேல் காகிதங்களும், நம்பர் கட்டுகளும் பரத்திக் கிடந்தன. நீல நிறத்திலுள்ள பெரிய பிளான் ஒன்று மடித்து வைக்கப்பட்டிருந்தது.

''என்ன மாஸ்டர்! வா, வா! ஏதாவது விசேஷம் உண்டா?'' என்று அவனை வரவேற்றார் அவர்.

''விசேஷம் ஒன்றுமில்லை. சும்மா இப்படி..'' என்றான் சீனன்.

''சும்மாச் சொல்; தயங்காதே! வா, இப்படிப் பக்கத்தில் வந்து உட்கார்!'' என்றார் பாரிஸ்டர்.

சீனன் அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டு, ''ஷங்கங்! அப்படி, அந்த நாற்காலியில் உட்கார்!'' என்றான். பிறகு பாரிஸ்டரைப் பார்த்து, ''நான் ஒன்றும் பெரிய வேலையை வைத்துக் கொண்டு வரவில்லை. ஒரே ஒரு சந்தேகம். அதைக் கேட்கவே வந்தேன்'' என்றான்.

''சந்தேகம் என்ன? தாராளமாகக் கேளேன்.''

''இப்பொழுது நாங்கள் உங்கள் பங்களா வாசலில் நுழைந்தபோது ஓர் ஆள் வெளியிலே பாய்ந்து போனான். அவனை நீங்கள்கூட காலையிலே ஹைக்கோர்ட்டுக்கு வரும்போது அழைத்து வந்தீர்கள். கிங்கிங் என்றோ சிங்சிங் என்றோ அவனைக் கூப்பிட்டீர்கள். அவன் யார்? அதைத் தெரிந்துகொள்ளத் தான் இங்கே வந்தேன்.''

''நீ வரும்போது அவனை வாசலில் பார்த்தாயா?''

''ஆமாம்; இங்கே வாசலில் மட்டும் என்ன? இன்றைக்குள் அவனை நான் காலையில் பார்த்ததையும் சேர்த்து நாலு தடவை பார்த்துவிட்டேன். நான் பார்த்தேன் என்று சொல்வதுகூடத் தப்பு. என்னைப் பார்க்கும்படி அவன் வைத்துவிட்டான். என்னையே அவன் சுற்றிக்கொண்டு இருப்பதாகத் தோன்றுகிறது. அப்படி அவன் சுற்றுவதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா?'' என்பதுபோல் கேட்டான் சீனன்.

பாரிஸ்டர் வேதாசலம் முகத்தைக் கொஞ்சம் சுருக்கிக்கொண்டு அவனையும் ஷங்கங்கையும் மாறி மாறிப் பார்த்தார்.

''அப்படியா? பின்னே நல்லவன் மாதிரி இங்கே வந்துவிட்டுப் போகிறானே!'' என்றார் பாரிஸ்டர்.

''யார் அவன்? என்னை ஏன் சுற்றுகிறான்?''

''அதுதான் சொன்னேனே! அவன் உன் சுவீகாரத் தந்தையின் தம்பி மகன். அந்தக் கிழவருடைய சொத்தெல்லாம் தனக்குக் கிடைக்கும் என்று அவன் சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டுவந்திருக்கிறன். ஆனல் அவன் எதிர்பார்த்ததற்கு நேர் விரோதமாக, கிழவர் தம் ஆஸ்தி, பாஸ்தி அனைத்தையும் உனக்குக் கொடுத்துவிட்டார். முதலில் அவர் இப்படிச் செய்யப் போகிருர் என்று எனக்கே தெரியாது. முதலில் அதைக் கேட்டதும் நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். உயிலில் கையெழுத்திட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பும் வரையில் நான்கூட அவர் விளையாட்டுக்குச் சொல்கிருர் என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தேன்..எனக்கே இதை நம்ப முடியவில்லை என்ருல், அவனுக்கு எப்படியிருக்கும்? பெரிய அதிர்ச்சியாகவே இருந்திருக்கும். ஆனல் அவன் தான் அதிர்ச்சியடைந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. 'உழைத்துச் சம்பாதிக்கக் கால் இருக்கிறது; கை இருக்கிறது. அந்தச் சொத்து எனக்குத் தேவையில்லை. நான் அதை எதிர்பார்க்கவும் இல்லை' என்றுதான் என்னைக் கண்டபோதெல்லாம் சொல்கிருன். ஆனல் உன்னைச் சதா பின்பற்றி வருகிருன் என்கிருயே, அதுதானே எனக்கும் காரணம் புரியவில்லை!'' என்ருர் பாரிஸ்டர்.

இந்தச் சமயத்தில் ஷங்கங் துள்ளிக் குதித்து, கதவுப் பக்கம் எட்டிப் பார்த்தான்.

''என்ன அது?'' என்ருர் பாரிஸ்டர்.

''ஏதோ காலடிச் சத்தம் கேட்டதுபோலிருந்தது. ஆனல் ஒருவரையும் காணும்!'' என்று சொல்லிக்கொண்டே அவன் வாசல் தெரியக்கூடிய இடமாகப் போய் உட்கார்ந்தான்.

பாரிஸ்டர் பிறகு, ''எங்கெங்கே அவனைப் பார்த்தாய்?'' என்று விவரமாகக் கேட்டார்.

சீனன் ஒவ்வொன்றையும் அப்படி அப்படியே சொல்லிக் கொண்டு வந்தான். அதையெல்லாம் கேட்ட பிறகுதான் பாரிஸ்டருக்கும் அந்தக் கிங்கிங் மீது கொஞ்சம் சந்தேகம் தட்ட ஆரம்பித்தது. நிச்சயம் அவன் ஏதோ விபரீத எண்ணத்துடன் பின்னல் சுற்றுகிருன் என்று தோன்றிற்று. அவர் எழுந்து காலால் ஒரு மின் சாரப் பொத்தானை அமுக்கவே சற்றைக்கெல்லாம் ஒரு வேலைக்காரன் தட்டுகளிலே சுடச் சுட டிபனும், பீங்கான் கோப்பையிலே பால், டிகாஷன், சர்க்கரையும் கொண்டுவந்து அவர்களுக்கு எதிரே வைத்தான்.

பாரிஸ்டர் டிபன் சாப்பிடும் போது, ''மாஸ்டர்! எனக்கு இப்போது ஒரு யோசனை தோணுது. செயின்ட் தாமஸ் மவுண்டு மேலே உனக்கு ஒரு பங்களா இருக்கு. நீங்க இரண்டு பேரும் அங்கே போய் ஒரு நாலு நாளைக்கு இருங்க..அப்புறம் என்ன செய்யலாமோ, பார்த்துக்கொள்ளலாம். சைனு ஹோட்டலுக்குப் போனல் தானே இப்ப வம்பு? பறங்கி மலைக்கு நீங்க போயிருப்பீங்க என்பது யாருக்குத் தெரியும்? அதுக்குள்ளே அந்தக் கிங்கிங் ஊருக்குத் திரும்பிவிடுவான்னு நினைக்கிறேன். அப்படிப் போகல்லே, அதுக்கு மேலே வேறே ஏற்பாடு செய்வோம்..எப்படி என் யோசனை?'' என்ருர்.

சீனனுக்கு அந்த யோசனை மிகவும் பிடித்திருந்தது. ஷங்கங்குக்கு அது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. பாரிஸ்டரையே அவன் ஏதோ சந்தேகக் கண்களோடு பார்த்தான். மவுண்ட் ரோடு என்ருலும் ஒரு ஆபத்து, விபத்து என்ருல் சட்டென்று உதவி கிடைக்கும். பறங்கிமலையில் அவர்களுக்கு யாரைத் தெரியும், யார் உதவிக்கு வந்து நிற்கப் போகிருர்கள் என்று அவன் எண்ணினன். ஆனல் சீனனுக்கோ, அந்த ஹோட்டலைவிட்டு வேறு எங்கே போய் இருக்கச் சொன்னலும் தேவலை போலிருந்தது. காரணம், படத்தில் தோன்றிய பையனுக்கு நேர்ந்த கஷ்டங்கள் எல்லாம் ஒரு ஹோட்டலில் தான் ஆரம்பமாயின. இவ்வளவு செல்வமும் வசதியும் உள்ள ஒருவன்



ஹோட்டலில் இருப்பதனால் எவ்வளவு கஷ்டங்கள் உண்டாகும் என்பதை அவன் கண்கூடாகக் கண்டுவிட்டான். மேலும் அவனையே பின்பற்றித் தொடர்ந்து வரும் கிங்கிங் அவனுடைய அறைக்கு எதிர் அறையிலேயே இருந்தது அவனுக்குப் புது அச்சத்தைக் கொடுத்தது. அதற்கு அடுத்தபடியாக அவனுடைய சிற்றப்பன் சின்னப்பக்கிரியும் அவன் மனைவி காளியாத்தாளும் அந்த ஹோட்டலைவிட்டு அந்தண்டை இந்தண்டை போவார்கள் என்று அவனுக்குத் தோன்றவில்லை.

திடீரென்று அவனுக்கு ஏதோ



ஒரு சந்தேகம் தோன்றவே, ''டேய் ஷங்கங்; நம்முடைய அறையைப் பத்திரமாகப் பூட்டினுயா?'' என்று கேட்டான்.

ஷங்கங்குக்கு நினைவு இருந்த வரையில் அதைப் பத்திரமாகத் தான் பூட்டி, பலம் கொண்ட மட்டும் கதவிலிருந்த கொக்கியைப் பிடித்து உதைத்துப் பார்த்திருக்கிருன். அவன் பூட்டினதில் என்னவோ சந்தேகமில்லை. ஆனுல் வேறு யாராவது மறு சாவி போட்டுத் திறந்தாலும் திறக்கலாம், அல்லவா? உள்ளே ஆயிரக் கணக்கான ரூபாய் நோட்டுகளும், விலையுயர்ந்த ஆபரண வகைகளும் எல்லாவற்றிற்கும் மேலாக கிழவர் கொடுத்திருந்த சைனு சு - சூ பெட்டியும் அங்குள்ள பீரோவில் தான் இருந்தன. அந்தப் பெட்டியின் ரகசியம் என்னவோ சீனனுக்குத் தெரியாது. ஆனுல் அதில் ஏதோ விலை மதிப்பற்ற பொருள் இருக்கிறது என்று மட்டும் அவனுக்குத் தெரியம். இல்லாவிட்டால், கிழவர் அந்தப் பெட்டிக்காக உயிரைக் கொடுக்கவும் தயங்காமல் போராடி யிருப்பாரா?

அந்தச் சிறிய வெல்வெட் பெட்டியின் நினைவு வந்ததும் சீனனுக்குப் பறங்கிமலைப் பங்களாவுக்குப் போவது உசிதமாகப் படவில்லை. ஆயினும் பெட்டியை எடுத்துக்கொண்டு, அந்த இடத்தை விட்டுப் போய்விடலாம் என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டான்.

பறங்கிமலைப் பங்களாவின் பெரும் பகுதியும் யாரும் வசிக்காமல்தான் இருந்தது. அதற்கு ஓர் 'அவுட் ஹவுஸ்' என்று ஓர் ஒட்டு வீடு வெளிப்பக்கமாக இருந்தது. அதில் நம்பிக்கையான வேலைக் காரன் ஒருவன் வசித்து வந்த தோடு, அவனே அந்தப் பங்களாவையும் அன்ருடம் கண்ணும் கருத்துமாகப் பராமரித்து வந்தான். இதையெல்லாம் பாரிஸ்டர் சீனக்கு இரண்டு நாள் முன்பே சொல்லியிருந்தார். அதையே மீண்டும் இன்றும் சொன்னுர். கிழவர் முன்பெல்லாம் பறங்கிமலைப் பங்களாவில் தான் வசித்து வந்தார். ஹோட்டல் பக்கமே அவர் ஒரு மாதத்துக்கு முன்பு வந்ததில்லை; வருவதும் இல்லை. அந்த ஹோட்டலை ஐந்தாறு பேர்கள் பணம் போட்டு விலைக்கு வாங்கி, நடத்தி வந்தார்கள். அவர்களில் அந்தக் கிழவருக்குத்தான் அதிகமான பங்குகள் இருந்தன. கிழவருக்குப் பிறகு, அவருடைய வாரிசான சீனனே அதற்கும் சட்டப்படி வாரிசாகி விட்டான். மொத்தம் அது இரண்டு லட்ச ரூபாய் பெறுமானமுள்ள ஹோட்டல். அதில் பெரும் பகுதிப் பங்கு அவனுடையது. அவன் நினைத்தால் அந்த ஹோட்டலின் மற்றப் பங்குகளையும் விலைக்கு வாங்கிக்கொண்டு விடலாம். அவனே அதை எடுத்து இன்னும் பெரிய அளவில் நடத்தலாம். ஆனுல் சீனனுக்கு அந்த எண்ணமே இப்போது இல்லை. தனக்குரிய பங்குகளையும் அவன் மற்றவர்களிடம் விற்றுவிடக் கூடத் தயாராகத்தான் இருந்தான். அது அவனுல் முடியுமோ என்னவோ, அதெல்லாம் பாரிஸ்டருக்குத்தான் தெரியும். பாரிஸ்டர் சம்மதித்தால், அல்லது அவர் வழி சொல்லிக் கொடுத்தால், அதன்படி செய்யலாம். அவனுடைய உரிமை, அதிகாரம், விருப்பம் இதெல்லாம் எவ்வளவு என்பது அவனுக்கே புரியவில்லை. முந்திப் பிந்தி அந்த மாதிரியான சொத்துக்களை உடையவனுக்கே புரிபடாத இந்த விஷயங்களை, அவன் பாவம், எப்படி அறிவான்?

இப்போதைக்கு, கிழவரைப் போலவே, பறங்கிமலைப் பங்களாவிலேயே போய்த் தங்கிவிடலாம் என்றுதான் அவனுக்குப் பட்டது. அங்கே போய், இரண்டு பேரும் தனியாக இருக்கலாமா, முடியுமா என்பதெல்லாம் அவனுக்குத் தோன்றவில்லை.

பாரிஸ்டர் அவர்களை அங்கே அனுப்பிவிடுவதற்கான யோசனைகளைச் சொன்னதோடு நில்லாமல், அந்தப் பங்களாவுக்கு அவர்களைத் தகுந்தபடி அனுப்புவதற்கான ஏற்பாடுகளையும் பத்து நிமிஷங்களில் செய்துவிட்டார். முதல் ஏற்பாடு

டெலிபோனில் அந்தக் காவற்காரனைக் கூப்பிட்டு, அந்தப் பங்களாவின் புதிய எஜமானன் வருவதை அறிவித்ததுதான். இரண்டாவது ஏற்பாடு அவர்களுக்குத் துணையாகத் தம்முடைய கார் டிரைவரை வண்டியை ஓட்டிக் கொண்டு போகும்படி சொன்னது. மூன்றாவதாக அவரே கூட வந்து விட்டுவிட்டு வருவதாகக் கிளம்பியது.

ஆனால் அவர் கூடவே புறப்பட்டு வருவதை ஷங்கங் விரும்பவில்லை என்பதை அவரும் புரிந்து கொண்டார்; சீனனும் புரிந்து கொண்டான். சீனனுக்கும் அவர் கூட வருவதில் மற்றொரு தடங்கல் இருக்கும் போலிருந்தது. அவர் வருவதாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் ஹோட்டலுக்குப் போகும் எண்ணத்தைக் கைவிட்டு விட வேண்டும். அப்படியானால் அந்தக் கைப்பெட்டி அங்கேயே அன்று இருக்க வேண்டியதாகத் தான் ஆகும். 'உயிரே போவதானாலும் பெட்டியைக் கோட்டை விட்டு விடாதே' என்று கிழவர் எச்சரித்திருந்தார்.

அதனால் அவன், ''சார்! நீங்கள் வீணாகச் சிரமப்பட வேண்டாம். அதுதான் உங்கள் டிரைவர் துணையாகவும் அடையாளம் காட்டவும் எங்களோடு வருகிறான். எங்களுக்கு அதுவே போதும். அவசியம் இருந்தால் உங்களுக்கு டெலிபோன் செய்கிறேன்'' என்றான்.

பாரிஸ்டர் நல்ல எண்ணத்தோடுதான் கூடவே வருகிறேன் என்கிறார் என்பதில் அவனுக்குச் சந்தேகமே உண்டாகவில்லை. பாரிஸ்டரை எவ்வளவு வேண்டுமானாலும் நம்பலாம் என்பது அவனுக்குத் தெரியும். வேறுவிதமாக இருந்திருந்தால் கிழவர், அதையும் அவனிடம் எச்சரிக்கை செய்யாமல் விட்டிருக்க மாட்டார்.

அவன் இவ்விதம் சொன்னதும் பாரிஸ்டர் அதற்குமேல் வற்புறுத்தவில்லை. கிளம்பத் தயாரானவர் தயங்கி நின்றுவிட்டார். சீனனும் அவன் தோழன் ஷங்கங்கும் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு, வாசலில் நின்ற காரில் போய், பின் சீட்டில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''சாபர், நீயும் அந்த டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள். அப்புறம் அந்த டிரைவரைக் கொண்டுவந்து இங்கே விட்டுவிட வேண்டும்'' என்று அவன் மிகவும் மிடுக்கோடு உத்தரவிட்டான்.

வண்டி புறப்பட்டது. ஒயிட்ஸ் ரோடு திரும்பியதும் சீனன் வண்டி ஓட்டுபவனைப் பார்த்து, ''முதலில் சைனீஸ் ரெஸ்டாரெண்ட் போ! அப்புறம் பங்களாவுக்கு அங்கிருந்தபடியே புறப்படலாம்'' என்றான்.

அடுத்த ஐந்தாவது நிமிஷத்தில் வண்டி வந்து, சைனா ஹோட்டல் வாசலில் வந்து நின்றது. ஆனால் நல்லவேளையாக, சின்னப் பக்கிரியோ, காளியோ அங்கே காணப்படவில்லை. இருவரும் விடுவிடென சீனனுடைய 'ஏர்-கண்டிஷன்டு' அறையை நோக்கிச் சென்றார்கள். அந்த அறைக்கு எதிர் அறை இப்போது பூட்டப்பட்டுத்தான் கிடந்தது. சீனனுக்கு அதுவரையில் திருப்திதான்.

''ஷங்கங்! இங்கே சாபரைக் காவல் வைத்துவிட்டு, அதற்குப் பிறகு நீ உள்ளே வா!'' என்று சீனன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போய், விளக்குகளைப் போட்டான். அது வரையில் அவனுக்கு உள்ளூறப் பயம்தான். ஆனால் நல்ல வேளையாக அங்கும் எல்லாம் வைத்தது வைத்தபடியே தான் இருந்தன. முதல் காரியமாக அவன் பீரோவைத் திறந்து சாவியை எடுத்து, நடு அறையிலிருந்த அந்த வெல்வெட் பெட்டியைத் தன் நிஜாருக்குள் திணித்து கொண்டான். அப்புறம்தான் அவன் மற்றவையெல்லாம் அப்படியே இருக்கின்றனவா என்று கவனித்துப் பார்த்தான்.

இதற்குப் பிறகு ஷங்கங் உள்ளே வந்தான்.

''ஏன். என்ன தேடுகிறாய்? ஏதாவது காணாமல் போய்விட்டதா?'' என்று கேட்டான்.

''அதெல்லாம் இல்லை. இதில் இருக்கும் பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு போய் விடு

வோம்; மற்றதெல்லாம் இப்படியே இருக்கலாம்'' என்று சொல்லிவிட்டு, நோட்டுக் கட்டுகளில் சிலவற்றை மட்டும் எடுத்துத் தன் இரண்டு சட்டைப் பைகளிலும் திணித்துக்கொண்டான். தன் பையில் எல்லாவற்றிற்கும் இடமில்லாமல் போகவே, இரண்டொரு கட்டுகளை ஷங்கங் பையினுள் வைத்துத் திணித்தான்.

மீண்டும் அதை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள். நடுவில் யாரும் வந்ததாகவோ போனதாகவோ தெரியவில்லை:

''சாபர்! யாராவது எதிர் அறைக்கு வந்தாங்களா?''

''இல்லை, மாஸ்டர்!''

''அப்ப சரி; போய் நமக்கெல்லாம் சாப்பாடு வேண்டாம் என்று மானேஜரிடம் சொல்லிவிட்டு வண்டிக்கு வா!'' என்று ஷங்கங் தோளில் கை போட்டுக்கொண்டு வண்டியில் போய் ஏறிக்கொண்டான்.

ஷங்கங்குக்கு இப்பொழுது எடுத்ததற்கெல்லாம் சந்தேகம் வந்திருந்தது. அவன் வண்டியினுள் ஏறிய சீனனைத் தடுத்துவிட்டு, அதற்குள் இருந்த சுவிச்சைப் போட்டுப் பார்த்தான். அதற்குப் பிறகு, ''சரி; ஏறு. நான் பின்னாலும் பார்த்துவிட்டு ஏறிக்கொள்கிறேன்'' என்று பின்னாலெல்லாம் சுற்றிப் பார்த்தான். சாபர் போய்ச் சொல்லிவிட்டு வந்து விடவே, வண்டி பறங்கி மலையை நோக்கி. விசாலமான மௌன்ட் ரோடிலே ஓடத் தொடங்கியது.

ஸ்பென்சர் கட்டிடம் நெருங்கும் போது சீனன் சாலையிலே யாரையோ பார்த்துவிட்டுக் கூவினான்.

''டேய்! அந்தச் சப்பை மூக்கன் அதோ நிக்கிறாண்டா! நம்ப வண்டியைத்தாண்டா பார்க்கிறான்!''

''எங்கே-? ஆமாண்டா! இந்தாப்பா, டிரைவர்! கொஞ்சம் வண்டியை வேகமாக மிதி, பார்க்கலாம்! உம்..'' என்றான் ஷங்கங்.

''நம்ம வண்டின்னு தெரிஞ்சிண்டிருப்பானடா இந்த வெளிச்சத்திலே?'' என்று கேட்டான் சீனன்.

''சொல்ல முடியாதுடா. தெரிஞ்சிண்டும் இருக்கலாம்; தெரிஞ்சிக்காமலும் இருக்கலாம்; ஆனால் நமக்கேன் வம்பு! வண்டியை எக்மோர் பக்கம் திருப்பி, அங்கிருந்து நுங்கம்பாக்கம் வந்து, மாப்பலத்துக்குப் பக்கமாய் விட்டு, சைதாப்பேட்டைக்கிட்டே வந்து மவுண்ட் ரோடிலே ஏறுவோம். டிரைவர்! ரைட்டிலே திரும்பிப் போ!'' என்று சீனன் மாதிரியே அதிகாசம் செய்து பார்த்தான் ஷங்கங்.

டிரைவர் உடனே சொன்னபடி செய்ததைப் பார்த்தபோது, அவனுக்கே கொஞ்சம் பெருமையாகத்தான் இருந்தது. சீனன் பணக்காரனாகிவிட்டான் என்றால் தானும் அதற்குப் பங்காளியாகிவிட்டோம் என்றுதான் அவனுக்குப் பெருமையாக இருந்தது. இனி, தட்டு தூக்கி, ''ஒன்றினா இரண்டிறினா'' கத்தல் எல்லாம் கத்தாமல், ஓரணாவுக்கும் அரையணாவுக்கும் நடையாக நடக்காமல் ஜம்மென்று இந்த வருஷத்துப் புது மாடல் காரில் போகலாம் என்று பெருமிதமாகவும் இருந்தது.

அவன் சொன்னபடியெல்லாம் அந்த வண்டி போய்ப் போய், கடைசியாகக் சைதாப்பேட்டை டோல் கேட்டுக்கு அருகில் போய்க் கொண்டிருந்தது. வளைவு திரும்பிய போது, பின்னால் வேறு ஒரு கார் வருவதுபோல் அதன் வெளிச்சம் பளீரென்று அடித்தது. சீனனுக்குச் சொரக்கென்று போய்விட்டது. திரும்பிப் பார்த்தான். ஒரு பேபி டாக்ஸி அவர்கள் வண்டியைச் சற்றுத் தள்ளியே பின்பற்றி வந்து கொண்டிருந்தது.

''வண்டியை ஒரு நிமிஷம் நிறுத்து!'' என்றான் ஷங்கங்.

வண்டி நின்றது. அது நின்றதும் பின்னால் வந்துகொண்டிருந்த டாக்ஸியும் சரக்கென்று நின்றது.

''ஓட்டு!''

அவர்கள் வண்டி ஓடத் தொடங்கியதும் பின்னால் வந்த டாக்ஸியும் துரத்திக்கொண்டு வந்தது.

''நிச்சயம் இதில் சந்தேகமில்லை. அந்தக் கிங்கிங் வரும் வண்டிதான் அது!'' என்றான் ஷங்கங்.

(தொடரும்)




# தலைக்கு வந்த ஆபத்து

சம்பந்தம்


அரண்மனைக்கு அழைத்துவரப் பட்ட தெனாலிராமனைக் கண்ட அரசன் அதி ஆச்சரியத்தில் அமிழ்ந்து போனான். ''ராஜ குரு எங்கே? அவரை யல்லவா நான் அழைத்து வரச் சொன்னேன்?'' என்று அந்தச் சேவகர்களைக் கடிந்து கொண்டான். இதைக் கேட்டதும் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மிரள மிரளப் பார்த்தார்கள். பின்னர், ''இல்லை அரசே. தோளிலிருந்த வரை நையப் புடைத்துப் போட்டுவிட்டு, சுமந்து வந்தவரை யல்லவா இங்கே அழைத்து வரச் சொன்னீர் கள்?'' என்று இருவரும் ஒரே சமயத்தில் பயந்த குரலில் சொன்னார்கள். ''எப்படி அது. தெனாலிராமனைத்தானே ராஜ குரு சுமந்துவந்தார்?'' என்றான் அரசன்.


''இல்லை அரசே! நீங்கள் முதலில் மேல் மாடத்திலிருந்து எங்களைப் பார்த்ததும் சேவகர்களைக் கூப் பிட்டு ஏதோ சொல்லி யனுப்பி யதை நான் குறிப்பால் அறிந்து கொண்டேன். உடனே நான் தங்களுக்கு மனவருத்தம் உண்டா கும்படி செய்துவிட்டனோ என்று பயந்து ராஜ குருவை என் தோளில் சுமந்துகொண்டு நடந்தேன், அரசே!'' என்று தெனாலிராமன் ரொம்பவும் வணக்கமாக பயந்த வன்போல சொன்னான்.

ஆனால் அவன் சொற்களில் எகத்தாளமும், விழிகளில் விஷமப் பார்வையும் பளிச் சிட்டன.


''ஆ! அப்படியா! முதலில் ராஜ குருவை அவமானப்படுத்தினதோ

## உங்களால் முடியுமா (விடை)



அ




டல்லாமல், இப்பொழுது இப்படி அடி வேறு வாங்கி வைத்து விட்டாயே, அவருக்கு!'' என்று சீற்ற மடைந்தான் அரசன். உடனே, ''இவனை அழைத்துக் கொண்டு போய் இப்பொழுதே இவன் தலையைச் சீவிவிட்டு வாருங்கள்'' என்று அந்தச் சேவகர்களுக்கு உத்தரவும் இட்டான் அரசன். தெனாலிராமன் தலை குனிந்தான். 'ஆ! ராஜ குருவுக்குக் கெடுதல் செய்யப் போக கடைசியில் நம் தலைக்கே ஆபத்து வந்ததே!' என்று வருத்தப் பட்டான். உடனே மகா காளியை மறக்காமல் துதித்துக் கொண்டே நடந்தான்.

வழி நெடுக அந்தச் சேவகர்கள் அவனை விசாரித்துக் கொண்டே நடந்தார்கள். தெனாலிராமனும் நடந்ததைச் சொல்லி, ராஜ குருவின் மேல் அவர்களும் துவேஷம் கொள்ளும்படி செய்துவிட்டான். அதோடு, ''அந்த நய வஞ்சக ராஜ குரு சௌக்கியமா யிருக்க என் தலையை உருட்டப்பார்க்கிறீர்களே, இது நியாயமா?'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான் அவன். அவர்கள் யோசித்துக் கொண்டிருந்த பொழுதே, தன் இடுப்பிலிருந்த பொன் முடிச்சை அவிழ்த்து ஆளுக்குப் பத்துப் பொன் கொடுத்தான். ''சரி, இப்போதே இந்த நாட்டை விட்டு ஓடிப் போய்விடு. பிறகு நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்றார்கள் அந்தச் சேவகர்கள். பொன் செய்த வேலை அது. உடனே அப்படியே செய்வதாக வாக்குக் கொடுத்து ஒட்டம் பிடித்தான் தெனாலிராமன். வேறு நாட்டுக்கு எங்கேயும் ஓடிப் போய்விடவில்லை. ரகசியமாகத் தன் வீட்டினுள்ளே வந்து ஒளிந்துகொண்டு தலைமறைவாக வாழ்ந்து வந்தான்.

அரண்மனைச் சேவகர்கள் அங்கே மேய்ந்துகொண்டிருந்த ஒரு ஆட்டை வெட்டி ரத்தம் தோய்ந்த கத்தியைக் கொண்டுபோய் அரசனிடம் காண்பித்தார்கள். அரசனும் தெனாலிராமன் கொலையுண்டான் என்றே எண்ணிக் கொண்டான்.

# கலைஞன் கானதேவன்

என். எஸ். சிதம்பரம்

## 1

சிம்மபுரியை ஆண்டு வந்த மன்னன் சிங்கார வர்மனின் மனம் சிந்தனைச் சுழலில் அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருந்தது. தேசத்தின் தலைவனை அவனுடைய பெருங் கவலையை அளவிட்டு யாராலும் தீர்க்கமாகச் சொல்ல முடியாது.

சிந்தித்தான் மன்னன். இன்னும் சிந்தித்துக்கொண்டே இருந்தான். ஆனால் ஆகும் வழி ஒன்றும் புலப்படவில்லை.

''அரசே, இப்படி ஒரே சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறீர்களே!'' என்ற குரல் கேட்டுத் திரும்பினான் மன்னன்.

அமைச்சர் கருணாகரர் நின்றுகொண்டிருந்தார்.

''அமைச்சரே, ஏதாகிலும் வகை தேடினீர்களா?''

''தேடினோம். எத்தனையோ திறமைசாலிகளைக் கொண்டு பலித்த மட்டும் பார்த்தோம். கைதேர்ந்தவர்கள் என்று வந்தவர்களெல்லாம் உள்ளம் சோர்ந்து போய்த் திரும்பினர்.''

''அப்படியென்றால் அல்லற் படவேண்டியதுதானா?''

''விரைவில் அந்த முடிவிற்கு வந்துவிட வேண்டாம். அரசே, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.''

''என்ன அது?''

''மக்களுக்கு நேர்ந்திருக்கும் மன நடுக்கம் கொடுக்கும்படியான இந்தப் பேராபத்தைத் தவிர்க்க முன்வருபவருக்கு அவர் விரும்பும் தக்க சம்மானம் மன்னரால் கௌரவத்துடன் அளிக்கப்படும் என்று முரசறிவித்தால்..''

''ஆமாம். அருமையான, நல்ல யோசனைதான். அமைச்சரே, அப்படியே முரசறிவிக்கச் செய்துவிடுங்கள்!''

அரசரின் ஆணையைப் பெற்று அகன்றார் அமைச்சர்.

## 2

இருந்தாற் போலிருந்து பட்டத்து யானைக்கு மதம் பிடித்துவிட்டது. மதம் பிடித்த யானை சும்மா இருக்குமா? அது தன் மனம் போன போக்குப்படியெல்லாம் திருவிளையாடல்கள் புரியத் தொடங்கிவிட்டது. நாட்டை அல்லோல கல்லோலப் படுத்தியது. வாயத்திலிருந்து சங்கிலியை அறுத்துக்கொண்டு கிளம்பிவிட்டது. நாட்டு மக்கள் அதைக் கண்டு இதயம் துணுக்குற்றனர்.


யானையைப் பிடித்திருந்த மதப்பேய் பல உயிர்களைப் பலி வாங்கி மகிழ்ந்தது. மரம், செடி, கொடிகளைப் பாழ் செய்தது. இன்ப இசை அன்பை விளைத்த நாட்டில் துன்ப இசைத் துக்கத்தைச் சூழச் செய்துகொண்டிருந்தது. மக்கள் ஒவ்வொருவரும் வீட்டை விட்டு வெளிக் கிளம்பவே அஞ்சினர். அரசாங்கத்தின் அலுவலகங்கள், ஆலயங்கள் மூடப்பட்டன. அரசாங்கமே நடைபெறவில்லை என்று சுருங்கச் சொல்லிவிடலாம்.

பட்டத்து யானைக்கு மதம் பிடித்தால் நாட்டிற்குப் பாதகம் நேரும் என்று பெரியோர்கள் கூறக் கேட்ட மன்னன் சிங்கார வர்மனின் உள்ளம் மீளாத் துயரடைந்தது. எத்தகைய இடையூறும் நேராமல் நாட்டைக் காக்கக் கடமைப்பட்டவனல்லவா, மன்னன்? பட்டத்து யானையின் மதத்தை அடக்கி, மக்களுக்கும் நாட்டுக்கும் நேர்ந்திருக்கும் பேராபத்தைப் போக்கி, மக்களைக் காக்க வேண்டிய கடமையுணர்ச்சி அவனது கவலையை அதிகப்படுத்தியது. எத்தனையோ திறமைசாலிகளாலும், கைதேர்ந்த யானைப் பாகர்

களாலும் யானையை அடக்க முடியவில்லை என்பதைச் சிந்திக்கச் சிந்திக்க, மன்னனின் மனம் மேலும் மேலும் வேதனையில் சிக்கித் தவித்தது.

## 3

அரசனின் ஆணைப்படி நாடெங்கும் முரசறிவிக்கப் பட்டது. கனக புரியில் வசிக்கும் கானதேவன் என்னும் கலைஞன் முரசறிவிப்பைக் கேட்டான். மகர யாழ் வாசிப்பதில் அவனுக்கு நிகர் அவனே. தந்திகளை மீட்டி, மகர யாழ் வாசிக்கத் தொடங்கி விட்டானானால், தரணியெல்லாம் செயலற்று விடும். கான சுகம் மேவும் அவனது யாழிசை ஊனெல்லாம் நிரம்பி வழியும்படி யாகஞானத் தேனும் அமுதத்தைப் பாய்ச்சும். கோலக் கடலும் கொஞ்சும் தன் அலை இசையைக் கொஞ்சம் நிறுத்தி, அவனது வாசிப்பில் மயங்கி நிற்கும். தீங்குயிலும் அவனது இசையில் தன்னிசை மறந்து லயித்திருக்கும். வானுலகும் அவனது இசையில் வசமிழந்திருக்கும். அத்தகைய இசை வல்லோனாகிய கானதேவன் தன் இசைத் திறத்தை அவசியம் அறியும்படியான தருணம் வாய்த்திருக்கிறதென்பதையும், தன்னைப் பற்றிய பாழும் வறுமை பஞ்சாய்ப் பறந்து விடப் போகிறதென்பதையும் நினைத்து நினைத்து ஆனந்தத்தால் உள்ளம் பூரித்துப் போனான்.



ஏதோ ஒரு பெருந் துணிவோடு, எதையும் ஆலோசிக்காமல் தன் யாழை எடுத்துக்கொண்டு சிம்மபுரி சென்றான். யாழிசை செய்து யானையை அடக்கி விடலாம் என்பது அவனது திண்ணமான எண்ணம் போலும்!

## 4

"கானதேவரே, நீர் துணிந்து வந்திருப்பது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். அனைவரும் முயன்று கைவிட்ட மத யானையை உம்மால்—"

"அரசே, ஒரு யாழ்ப் புலவனால் யானையை அடக்க இயலுமா என்றுதானே ஐயப்படுகிறீர்கள்? இதயம் உருக்கும் நல்ல இசையைக் கேட்டால் பட்ட மரம்கூடத் துளிர்த்து இன்பக் கண்ணீர் பெருக்குமே! மண்ணையும் விண்ணையும் மண், விண் என்ற பேத

மற்றுப் பெரிதும் மறந்திருக்கச் செய்யும் பெருமை இசைக்கல்லாது வேறெதற்கு உண்டு? நச்சுப்பை கொண்டு படம் எடுத்தாடும் நாகப் பாம்பும் மகுடி இசையில் மயங்கித் தன் வசமிழந்திருப்பதைத் தாங்கள் நேரில் கண்டறிந்திருப்பீர்களே. யாழிசை புரிந்து யானையை அடக்கிவிட இயலும் என்பது என் முழு நம்பிக்கை.''

''யாழ் இசையில் அவ்வளவு திறம் படைத்தவரா? நன்று. கானதேவரே, நீர் யானையை அடக்கச் செல்லலாம். அடக்கிவிட்டால் நீர் விரும்பிய பொருள் அன்புடன் பரிசாக அளிக்கப்படும்.''


மன்னனிடம் விடைபெற்றுக் கொண்டு கானதேவன் நிலையின்றி அலைந்துகொண்டிருக்கும் மத யானையிடம் மகர யாழுடன் மனத்தில் கலைத் தெய்வத்தைத் தியானித்த வண்ணம் சென்றான்.

## 5

மதயானையை அடக்க, யாழ் வாசிப்பில் நிகரற்ற கானதேவன் வந்திருக்கும் செய்தி மாநகர் முழுதும் பரவியது. மாந்தரெல்லோரும் நற்காலம் பிறந்ததென்று மகிழ்வெய்தினர். கானதேவனின் அமுத யாழிசையைப் பருகவும், மதயானை அடங்கும் விதத்தைக் காணவும் நகர மக்கள் யாவரும் ஒன்று திரண்டனர்.

''கானத்தின் சுகத்தினில்
காசினி மயங்கிடுமே!
கல்லும் கொடும் விலங்கும்
கனிந்தே உருகிடுமே!
ஞானத்தின் வடிவினன்
ஈசனும் ஏழிசையாய்
நாதத்தின் நிலையாய்
நன்றே அமைந்தனனே!''

இந்தப் பாடலை இசைத்து, தொலைவில் யானை நின்றுகொண்டிருக்கும்போதே கானதேவன் யாழை மீட்டத் தொடங்கிவிட்டான். எங்கும் யாழின் இன்ப நாதம் ஊதுவத்தியின் சுகந்த மணம்போல் எல்லோருடைய செவிகளிலும் சூழத்தொடங்கியது.



யானையின் செவிகளிலும் யாழிசை புகுந்தது என்றுதான் சொல்ல வேண்டும். யானையிடம் படிப்படியாக மாறுதல்கள் உண்டானதை மக்கள் யாவரும் கூர்ந்து கவனித்தனர்.

இதுவரை கேட்டறியாத அமர கானமாக அல்லவா இருக்கிறது என்று அரசன் சிங்கார வர்மன் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனான். மண்ணகமும் விண்ணகமும் யாழிசையில் மயங்கி இசை இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதை நேரில் கண்டான் மன்னன். வெறி பிடித்த மதயானை யாழிசையைக் கேட்டுத் தன் பயங்கரக் கர்ஜனையை நிறுத்தித் துதிக்கையைத் தொங்கவிட்டுக்கொண்டு சாந்தமுடன் கானதேவனை அணுகும் காட்சியைக் கண்ட மக்கள் அனைவரும், “கானதேவனுக்கு ஜே! கானதேவனுக்கு ஜே!!” என்று வெற்றி முழக்கம் செய்தனர். மன்னனின் கண்களுக்குக் கானதேவன் சாதாரண மனிதனாகத் தோற்றவில்லை. உண்மையில் பெயருக்கேற்பக் கானத்திற்கெல்லாம் தேவனாகவே காட்சி தந்தான்.

அதம் செய்து வந்த மதயானை யாழிசையில் உள்ளத்தைப் பறிகொடுத்து, மதமொழிந்து கடைசியில் கானதேவனிடம் அடைக்கலம் புகுந்தது போல் மண்டியிட்டது தான் தாமதம், கானதேவனின் புகழ் மணம் கண நேரத்தில் எங்கும் கமழத் தொடங்கிவிட்டது. மக்களைப் பாதித்த தீமை மடிந்ததென்றும், கவலை தீர்ந்ததென்றும் களிப்புற்றான் மன்னன். கானதேவனைத் தக்கபடி கௌரவிக்க வேண்டும் என்ற ஆவலால் அரச சபைக்கு ஆரவாரத்துடன் அழைத்துச் சென்றான் அரசன்.

## ௬

“கானதேவரே, யாழிசையில் உம்மை வெல்லக் கூடியவர் இந்த உலகில் எவரும் இல்லை என்பது என் கருத்து. மதயானையை அடக்கி, உம் கலைத்திறனை அனைவரும் வியக்கும்படிச் செய்துவிட்டீர். நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் நீர் செய்த உதவி மகத்தானது:”

“அரசே, என் யாழிசைக்கு இந்தப் பட்டத்து யானை மட்டும் என்ன, ஈரேழு பதினான்கு உலகங்களுமே என் வசமாக வேண்டும்.”

“உண்மைதான்; கானதேவரே. உம்மை அரசாங்கத்தின் நிலையான கலைமணியாக ஆக்கிக்கொள்ள விரும்புகிறேன். உம்முடைய விருப்பம்?”

“அதைப்பற்றி என் விருப்பம் என்று ஒரு தனி விருப்பமில்லை, அரசே. நான் அரசாங்கத்தின் கலைமணியாவது இருக்கட்டும். தாங்கள் வாக்களித்தபடி எனக்கு என்ன சம்மானம் அளிக்கப் போகிறீர்கள்?”

“உமது மனம் திருப்தி அடைகிற வரையில், உமக்குக் கனகாபிஷேகம் செய்யலாமென்று உத்தேசித்திருக்கிறேன்.”

“எனக்கேன் கனகாபிஷேகம்? பொன்னை மதிக்கும் கலைப்புலவனல்ல நான்.”

“அப்படி என்றால் தாங்கள் விரும்பும் பொருள்?”

“நான் செய்த பேருதவிக்கு நான் விரும்புவது பட்டத்து யானை.”

“என்ன, பட்டத்து யானையையா பரிசாகக் கேட்கிறீர்?”

“ஆம் அரசே, நான் கேட்பது பட்டத்து யானையேதான். அடக்குபவர் விரும்பும் பொருளைப் பரிசளிப்பதாக அறிவித்த தாங்கள் சத்திய வாக்கை நிறைவேற்றி வைக்க வேண்டியது தங்கள் கடமை.”

கானதேவனின் இந்தப் பிடிவாதமான கோரிக்கையைக் கண்ட அமைச்சர் கருணாகரர் கானதேவனைச் சற்று சிந்தித்து அரசரிடம் கேட்கும்படி கூறினார். ஆனால் கானதேவனோ அதைச் செவியேற்றானில்லை.

“நன்றாகச் சிந்தித்துத்தான் கேட்கிறேன். நான் கேட்ட பரிசைக் கொடுப்பதற்கு அரசர் ஏன் இப்போது தயங்கவேண்டும்? அரசர் வாக்குத் தவறாதவர் என்று அகிலம் புகழ்ந்து கொண்டாடுவ

தெல்லாம் வீண்தானு?'' என்று பதற்றத்துடன் பேசலானுன் கானதேவன்.

''அறச் செங்கோல் பிடித்து அரசர் விற்றிருக்கும் சபை இது. கலைஞர் திலகமே! சற்று நிதானத்துடன் பேசுங்கள்'' என்று எச்சரித்து விட்டு, நாட்டுக்கும், அரசாங்கத்துக்கும் உரிமைப் பொருளாக இருக்கும் ஒரே பட்டத்து யானையை எப்படிப் பரிசாக அளிக்க முடியும்? பட்டத்து யானை மன்னனின் சொத்தல்லவே'' என்றுர் அமைச்சர் அமைதியாக.

''யார் சொத்தாக இருந்தால் எனக்கென்ன? நான் துணிந்து பரிசாகக் கேட்ட பொருளைத் தவிர, வேறு எதுவும் பெற்றுக் கொள்ளச் சித்தமாயில்லை'' என்று கண்டிப்பான முறையில் அமைச்சரின் பதிலுக்கு மறுமொழி கூறி விட்டான்- கானதேவன்.

இந்த உலகில் இசையில் தனக்கு இணை யாருமில்லை என்ற கர்வமான எண்ணம் நஞ்சுபோல் கானதேவனின் உடம்பெல்லாம், நரம்பெல்லாம், பரவி நல்லறிவை நாசப்படுத்தியிருக்கும் நிலையைப் பார்த்த விவேகம் படைத்த மன்னன் சிங்கார வர்மனுக்குக் கானதேவன்பால் ஒரு விதத்தில் ஆத்திரமும், மற்றொரு விதத்தில் வருத்தமும் உண்டாயின. அவற்றையெல்லாம் வெளிக் காட்டிக் கொள்ளாமல் கானதேவனை நோக்கிக் கனிந்த அன்போடு கூறலானுன் சிங்கார வர்மன்:

''கானதேவரே, கலைத்தெய்வத்தின் பரிபூரண கருணைக்குப் பாத்திரமான நீர், கருத்தழிந்து பேசுவது எனக்கு வியப்பாகவே இருக்கிறது. மக்கள் விரும்பினுலன்றி நானுகப் பட்டத்து யானையைத் தருவதற்கில்லை. நீர் அரச பதவியைக் கேட்டாலும்கூட நான் தயங்கப் போவதில்லை. ஆனுல் ஒன்று நீர் அவசியம் சிந்திக்க வேண்டும்.''

''என்ன?''

''இசையில் வல்லவரான நீர் மகர யாழ் மீட்டி மதங்கொண்ட யானையை அடக்கி விட்டீர்: அது ஒரு பெரிய காரியமல்ல.''


''பெரிய காரியமல்லவா?''

''ஆமாம். பதருமல் கேளும்: ஈடு இணையற்ற கலைத் திறன் இருந்தென்ன பயன்? அக் கலைத்திறனுல் அகந்தை மேலிட்டதுதான் கண்ட பலன். உமக்குள்ளிருந்து மதியைக் குலைக்கும் அந்த மதத்தை அடக்க வகை யறியாது, பட்டத்து யானையையே பரிசாகச் கேட்கத் துணிந்துவிட்டீர். அது எவ்வளவு மதம் பிடித்த எண்ணம் என்பதை அணு அளவேனும் எண்ணிப் பார்த்தீரா? ஒவ்வொருவரையும் அறிவைக் கெடுத்து, உள்ளிருந்து ஆட்டிவைக்கும் மதமான பேய் ஒழிய வேண்டும். மத யானையை அடக்குவதைவிட அகந்தைப் பேய் பிடித்த உம் உள்ளத்தை அடக்குவதே கடினமான காரியம்.''

அரசனின் இந்த அறிவான பதிலைக் கேட்டதும் கானதேவனுக்கு ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை. நா எழவும் இல்லை. மதயானை அடங்கியது போல் மௌனமாயிருந்தான்.

சற்று நேரம் கழித்து, ''ஆம், அரசே. இப்போது தான் என் அகக் கண் திறந்தது. மதயானையை அடக்குவதைவிடத் தீமை தரும் அகந்தைப் பேய் பிடித்த என் உள்ளத்து யானையை அடக்குவதே கடினமான காரியம்'' என்று கானதேவனின் வாய் அவனையும் அறியாமல் கூறத் தொடங்கியது. தன் பிழை உணர்ந்து விட்டான் கானதேவன்.

தன்னையுணர்ந்த கானதேவனின் தன்மைக்கு மகிழ்ந்து மன்னன் சிங்கார வர்மன், மனங்குளிரும் மட்டும் கானதேவனுக்குக் கனகாபிஷேகம் செய்து, பட்டத்து யானைக்குப் பதிலாக வேறொரு யானையைப் பரிசாக அளித்துக் கௌரவித்தான். அரசாங்கத்தின் கலைமணியாகவும் அவனை ஆக்கிக்கொண்டான்.




எழுத்தாளர் வீட்டுக்குள் சிறிது சப்தம் கேட்டாலும் கோபம் கொள்வார். அவருக்குப் பிடித்தமான பொருள், இந்த உலகத்தில் அமைதி. தீவிரமாக, அவர் எதையோ எழுதிக் கொண்டிருந்த போது, பட்டுச் சட்டை, ஜரிகை அங்கவஸ்திரம், கமகமவென்ற ஜவ்வாது பொட்டு- இவைகளுடன் வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு, கம்பீரமாக நடந்து வந்தார் ஒருவர். வரும்போதே, வெண்கலக் கடையில் யானை புகுந்தாற்போல, ''இதுதானே நம்பிராஜன் வீடு?'' என்றார்.

எழுதிக் கொண்டிருந்தவர் ஏறிட்டுப் பார்த்தார். அவருக்கு வந்தவரின் உரத்த பேச்சுப் பிடிக்கவில்லை. 'உம்' என்று ஆமோதித்த போது, மீண்டும், ''அந்தப் பையனுக்கு நல்ல தாள ஞானம் இருக்கிறது, சார். அவன் மிருதங்கம் கற்றுக் கொண்டால் நன்றாகப் பிரகாசிப்பான்'' என்று எதிர் நாற்காலியில் உட்கார்ந்தார்.

''அந்தப் பையனை உங்களுக்குத் தெரியுமோ?'' என்றார் நிமிர்ந்த எழுத்தாளர்.

''என் பையனோடு படிக்கிறான். உள்ளே இருந்தால் கூப்பிடுங்கள்; திஸ்ர ஜாதி திரிபுடையில் அன்றைக்கு எங்கள் வீட்டுக்கு வந்த போது ஒரு ஆவர்த்தனம் சொன்னான். கை எப்படிப் பேசுகிறது. இத்தனைக்கும், பையன் சாதிக்காய்ப் பெட்டியில்தான் வாசித்தான்.''

''நீங்கள் யார்? மிருதங்க வித்வானா?''

''பையனுக்கு என்னிடம் மிருதங்கம் கற்றுக்கொள்ள ஆசையாம். நீங்கள் பையனை உற்சாகப் படுத்த வேண்டும். நம்ம நாட்டில், பிள்ளைகளை அவர்கள் மனசுப்படி கலை பழக விடுவதில்லை. இன்னும் ஆறே மாதத்தில் கச்சேரிக்குத் தயார் செய்து விடுகிறேன்.''

''மிருதங்கம் அவனுக்கு வேண்டாம்.''

''கடம் சொல்லி வைக்கிறேன்: அதிலும் என்னக்குப் பயிற்சி உண்டு. கடம் பேஷாக வாசிப்பேன்.''

''கடம் எனக்குப் பிடிக்காது.''

''கடம் வேண்டாமென்றால், கஞ்சிரா என் கையில் என்னமாகப் பேசும் தெரியுமா? அதை வாசிக்கட்டுமே.''

எழுதிக் கொண்டிருந்தவருக்கு எரிச்சல். ஆசாமியை எப்படியா

வது வெளியே தள்ளிவிட எண்ணி ஞர்.

''கஞ்சிராவில் அதிகமான பிழைப்புக் கிடையாது. அதனுல் இப்போது வேண்டாம். தாள வாத்தியங்களால் என்ன லாபம் வந்துவிடப் போகிறது?''

இதைக் கேட்டு வந்தவர் ஓடிப் போய் விடுவார் என்று எதிர்பார்த் தார். வந்தவர் பெரிய பேர் வழி;

''நீங்கள் ரொம்பவும் அநுபவம் உள்ளவர் சார். தாளம் போனுல் கூளம். கூளம் என்று பாரதியாரே பாடி இருக்கிறபோது, வேறு வாத்தியங்கள் நல்லது.''

''அப்படி என்ன வாத்தியம் சொல்லி வைக்கலாம் என்று முடிவு கட்டவில்லை. பிறகு சொல்லி அனுப்புகிறேன். உங்கள் விலாசம்?''

''பிறகு என்ன? உங்கள் மன சைச் சொல்லுங்கள்.''

''எனக்குப் பிடித்தமானது வீணை. என் சம்சாரத்திற்குப் பிடித்தமானது கோட்டு வாத்தி யம்.''

எழுத்தாளர் வெற்றி கண்டவ ரைப் போல நிமிர்ந்து பார்த்தார்.

''அதற்கென்ன, எனக்கு இரண்டும் வாசிக்க வரும். வீணை ஒரு நாள், கோட்டு வாத்தியம் ஒரு நாள் என்று சொல்லி வைக் கிறேன்.''

''இதிலே ஒரு சிரமம். அவன் தாய் மாமன்தான் பணம் கொடுக் கப் போகிருர். அவர் சொல்லு வது, வயலின் சொல்லிவைக்க வேண்டும் என்ருர்.''

வந்தவர் எடுப்பார் ஒட்டம் என்று பார்த்தால், ''ஆகா, நீங்கள் ரொம்பவும் நெருங்கி வந்து விட்டீர்கள். எனக்கு வயலின் வாசிக்கத் தெரியும். அதுவே சொல்லி வைக்கிறேன். பையனைக் கூப்பிடுங்கள். இதுவே நல்ல வேளை ஆரம்பித்து விடலாம்'' என்று பிடித்துக் கொண்டார். எழுத்தாளருக்குச் சப்தம் என்ருலே எமவாதனை. பையன் பிடிவாதத் தைப் போக்க அவர் எத்தனையோ யுக்திகள் செய்தது இன்று தரை மட்டமாவதைக் கண்ணுரக் கண் டார்.

''இதிலே ஒரு ரகசியம்; நீங்கள் நம்பினுல் நம்புங்கள். இல்லா விட்டால் போங்கள். அவனுக்குச் சாரங்கி கற்றுக் கொடுக்கலாம் என்றுதான் முடிவு. அடுத்த வருஷம் அவன் வடநாட்டில் படிக்கப் போகிருன். அங்கேயே சொல்லி வைக்கலாம்....''

''சாரங்கிதானே! அதுவும் அடியேனுக்கு வாசிக்கத் தெரியும். நாளைக்கு ஒரு சாரங்கியோடு வந்து விடுகிறேன். பையனைக் கூப்பிடுங் கள்.''

எழுத்தாளருக்குக் கற்பனை வறண்டு விட்டது. இனிமேல், உலகில் என்ன வாத்தியம் உண் டென்று யோசனை செய்தார்.

''இப்போது உண்மையை உங்களுக்குச் சொல்லுகிறேன். வாய்ப் பாட்டு..''

''அதுவும் அடியேனுக்கு உண்டு.''

''இதுதான் கடைசி உண்மை சார். அவனைத் தவில் வித்வானுக ஆக்கிவிட உங்களால் முடியுமா?''

''தவில்!'' என்று கடகடவெனச் சிரித்தார். ''நான் முதல் சிட்சை கொண்டதே ஒரு தவில் வித்வா னிடந்தான். உங்களுக்கு எதை வாசிக்க வேண்டும். எந்த வாத்ய மானலும் சரி; ஆறு மாதத்திற் குள் கச்சேரி பண்ணும்படி நான் செய்வேன்! இது உறுதி'' என்று சொன்ஞர் அந்தச் சகல கலா வல்லவர்.

''உங்களுக்கு எல்லா வாத்தி யங்களும் வாசிக்க வருமா? ஆர்மோனியம்?''

''பேஷாக வாசிப்பேன்.''

''பியானே?''

''வாசிப்பேன்.''

''ஜலதரங்கம்?''

''வாசிப்பேன்.''

''நீங்கள் வாசிப்பில் கெட்டிக் காரர். நம்பிராஜா'' என்ருர் எழுத்தாளர். வீட்டுக் குள்ளிருந்து பையன் பயந்து கொண்டு வந்தான்.

''பையன் ரொம்பக் கெட்டிக் காரன், சார், நீங்கள் இவன் எதில் எதில் வாசிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களோ, அத்தனை யும் வாசிக்க வைக்கிறேன்.''

எழுத்தாளர், 'இத்தனை கலைகளி லும் கை தேர்ந்தவர் டியூஷன் தேடி, தொல்லை தருவானேன்?' என்று எண்ணியபடியே உச்சி முகட்டைப் பார்த்தார். ஆசாமி வாய் அரட்டை என்பதை உணர்ந் தார்.

''இது மட்டுமல்ல சார், இதோ பாருங்கள். விகடம் கூட வரும். எனக்கு எதிலே வசிப்பு உண்டோ அத்தனையும் வாயால் வாசித்துக் காட்டுவேன்!''

வந்தவர் பெரிய கர்வி; வாயாடி என்பது புரிந்தது, ''டேய் நம்பி ராஜா, ஐயாவுக்கு உன் வாய் பாட்டைக் கொண்டுவந்து கொடு. அவர் அதை வாசிக்கட்டும்'' என்றார்.

வந்தவர் பேந்தப் பேந்த விழித்தார்:

''வாய்பாடு வாசியுங்கள் கேட்க லாம்'' என்றபோது அசடு வழிந்தது.


''சார், மன்னிக்கணும்'' என்ற சகல கலா வல்லவர் பேசாமல் இறங்கிப் போய்விட்டார்.

---

# ஜாலவித்தை

## தானாகவே எரியும் மெழுகுவத்தி

சில மெழுகுவத்திகளை உங்கள் மேஜைமீது வையுங்கள். மற்றோர் எரியும் மெழுகுவத்தியால் அவை எல்லாவற்றையும் எரிய விடுங்கள்.



இப்போது மேஜை மீது எரிந்துகொண் டிருக்கும் வத்திகளை எல்லாம் ஒரே சம யத்தில் அணைத்து விடுங்கள். அணைத்த உடனே வத்திகளி லிருந்து மேலே புகை கிளம்புகிறதல்லவா? நீங்களும் உடனே தாமதிக்காமல் கையி லுள்ள எரியும் மெழுகும் வத்தியை அவைகளின்மீது மேலாக எடுத்துச் செல்லுங்கள். என்ன அதிசயம்! அணைந்த வத்திகளெல்லாம் தானாகவே சட் டென்று சுடர் விட்டு ஒளியை அள்ளி வீசத் தொடங்கிவிடும். என்ன வித்தையாக இருக்கிறதே என்று ஆச்சரியப்படுகிறீர் களா?

இதை உங்கள் நண்பர்களுக்கும் செய்து காட்டுங்கள். இருட் டறையில் செய்து காண்பித்தால் உங்கள் நண்பர்கள் நிச்சயம் மூக்கின்மேல் விரல் வைத்து மகிழ்வார்கள். ஏதோ ஒரு மாய பூதம்தான் வந்து ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் எரியச் செய்கிறதோ என்று நினைக்கவும் தோன்றும்.

[கவனிக்க: தீயுடன் விளையாட வேண்டியிருப்பதால் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கும்படி உங்களை எச்சரிக்க விரும்பு கிறேன்.]

—எஸ். டி. முகர்ஜி

# பகல் தூக்கம்

ஆர். என். ராஜன்

என் தம்பி சோமுவுக்கு எப்பொழுதுமே தூங்குவதில் விருப்பம் அதிகம். அதுவும் தினந்தோறும் பகலில் சாப்பிட்டவுடன் தூக்கம் போடுவது என்பது வழக்கமாக இருந்தது.

ஒரு நாள் மத்தியான்னம் மூன்று மணி இருக்கும். நல்ல தூக்கத்துக்குப்பின் கண் விழித்தான் சோமு. அப்பொழுது 'கம்'மென்ற நல்ல மணம் அவன் மூக்கைத் துளைத்தது. அதை நன்கு அநுபவித்தவாறே அந்தமணம் எந்தப் பக்கத்திலிருந்து வருகிறது என்று பார்த்தான். ஆம், சந்தேகமே இல்லை. அடுக்களையிலிருந்துதான் அந்த வாசனை வந்துகொண்டிருந்தது. 'சரி, அம்மாதான் ஏதோ நல்ல பட்சணம் செய்கிருள்!' என்றுதான் முதலில் எண்ணிஞன். 'ஆனல் அங்கே சந்தடியைக் காணேமே' என்று ஒருகணம் யோசித்தான். எப்படியிருந்தால் என்ன? போய்த்தான் பார்த்துவிட்டால் போச்சு என்று தீர்மானம் செய்து அந்த இடத்தை நோக்கி விரைந்தான்.

அடுக்களையை நெருங்க நெருங்க, அவன் ஆவல் பன்மடங்கு அதிகமாயிற்று. அந்தப் பட்சணம் எதுவாக இருக்க வேண்டும் என்பதையும் ஊகித்துவிட்டான். பால் மணம் வீசியதால் அது திரட்டிப் பாலாகத்தான் இருக்கவேண்டும் என்று முடிவு செய்தான். அங்கே சென்றதும் அறையின் மத்தியில் ஒரு பாத்திரம் இருந்தது. ஆனல் அங்கே வேறு யாரையும் காணேம். அந்தப் பாத்திரத்தைப் பார்த்த அவனுக்கு பெருத்த ஏமாற்றமாக இருந்தது. ஏன் தெரியுமா?

அந்தப் பாத்திரத்தை இவனுக்கு முன்பு யாரோ காலி செய்திருந்தார்கள். அதன் ஓரங்களில் மட்டும் கொஞ்சம் (திரட்டிப்பால்தான்) ஒட்டிக்கொண்டிருந்தது. அதற்குத்தாஞ இவ்வளவு வாசனை! அதை வழித்து நாக்கில் வைத்துக்கொண்டான். 'அடடா! என்ன ருசி, என்ன ருசி! சற்று முன்னல் வராமல் போய்விட்டோமே! அநியாயமாகத் தூக்கம் நம்மைக் கெடுத்துவிட்டதே!' என்று எண்ணிக்கொண்



டிருக்கும்போதே வாசலிலிருந்து அம்மா வந்தாள் அங்கே.

சோமுவையும் அவன் முன்னால் காலி செய்யப்பட்டிருந்த அந்த ஏனத்தையும் கண்டதும் அவளுக்குக் கோபம் கட்டுக்கடங்கவில்லை.

இதற்குள் என்ன நடந்தது தெரியுமா? நான் என் நண்பன் வீட்டில் 'கேரம்' விளையாடிவிட்டு கொல்லைப்புறக் கதவைத் திறந்து கொண்டு வீட்டினுள் நுழைந்தேன். கிணற்றங்கரையில் இருந்த என்னுடைய குட்டித் தங்கை கோமளா, கடைத் தம்பி கல்யாணம், பக்கத்துவீட்டு பத்மா மூவரும் திருட்டுப் பார்வையை நாலு புறமும் செலுத்திக்கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் மூவரும் சுவர் ஓரம் இருந்த மல்லிகைச் செடியருகே சென்றுவிட்டார்கள். நானும் இதைப் பொருட்படுத்தாமல் அவர்களைத் தாண்டி உள்ளே சென்றேன்.


கொல்லை ரேழியைத் தாண்டி வந்ததும் அடுக்களையில் கோபக் கனலைக் கக்கிகொண்டிருந்த அம்மாவையும் அவள் எதிரில் பயத்தால் நடுங்கிப்போய் உட்கார்ந்திருந்த அப்பாவி சோமுவையும் கண்ட மாத்திரத்தில் நான் விஷயத்தை ஒருவாறு ஊகித்து அறிந்துவிட்டேன். 'நான் இப்பத்தான் அம்மா வந்தேன். நிஜமா நான் திங்கவேயில்லைம்மா'' என்று கெஞ்சும் குரலில் அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்தான் சோமு.

அம்மா அவனை அடிக்கக் கையை ஓங்கியதும் நான் இடையே போய் நின்று தடுத்தேன்.

''அம்மா, அம்மா, அவனை அடிக்கப் போகாதே. நிறுத்து. கொஞ்

---

## கோமாளியின் கண்கள்!



கோமாளியைப் பார்க்கும் போதே உங்களுக்குச் சிரிப்பு வருகிறதா? இந்தக் கோமாளியும் உங்களுக்குச் சிரிப்பு ஊட்டத்தான் இங்கே காட்சியளிக்கிறான்! கெட்டியான தாளால் செய்யப்பட்ட நீண்ட உறை ஒன்று (A thick envelope) எடுத்துக் கொள்ளுங்கள். அதன் முன் உங்களால் முடிந்த அளவு பெரிய கோமாளியின் தலை ஒன்று வரைந்து, அதற்கு வேடிக்கையான கலரும் கொடுத்துவிடுங்கள். அந்த உறையில் தலைக்கு மேலும் கழுத்துக்குக் கீழும் பிளேடினால் கீறிவிடுங்கள். கண்களையும் வட்டமாகத் கத்தரித்து எடுத்துவிடுங்கள். நீண்ட துண்டுக் காகிதம் ஒன்றையும் கீரல்களுக்கிடையே போய் வரும்படி கத்தரித்து அதில் தடியான வளைவு கோடுகளை வரைந்துவிடுங்கள். அந்த நீண்ட துண்டுக் காகிதத்தை பின்புறமாகச் செருகிவிடுங்கள். இப்போது மேலும் கீழும் அதை அசைத்துப் பாருங்கள். என்ன, பல்லை இளிக்கிறீர்கள்? கோமாளி உங்களைப் பார்த்து விழிகளை உருட்டிச் சிரிப்பூட்டுகிறான்!




சம் கொல்லைப்புறம் வா. வேடிக்கையை நீயே பார்த்துப் புரிந்து கொள்ளலாம்'' என்றேன் நான்.

''அங்கே என்னடா வேடிக்கை?'' என்றாள் அம்மா கோபத்தோடு.

''அங்கேதான் குற்றவாளிகள் இருக்கிறார்கள். இவன் என்ன செய்வான், பாவம்! வாயேன்'' என்று அம்மாவைக் கிணற்றங் கரைக்கு அழைத்துச் சென்றேன். சோமுவும் கூட வந்தான்.

அங்கே மல்லிகைச் செடியின் கீழே மூன்று பேர்களும் கையில் அள்ளிவந்த திரட்டிப்பாலை யெல்லாம் விழுங்கியும் திருப்தி யடையாமல் கையைக் கழுவவும் மனமில்லாமல் சப்புக் கொட்டிக் கொண்டே அமர்ந்திருந்தார்கள். எங்களைக் கண்டதும் குற்றம் செய்த நெஞ்சத்துடன் செய்வதறியாமல் விழித்தார்கள். அம்மாவும் விஷயத்தை ஒருவாறு ஊகித்து அறிந்து கொண்டாள்.

சோமு நன்றி தோய்ந்த முகத்துடன் என்னைப் பார்த்தான். அவன் வாய், ''பாட்டி, 'பகலில் தூங்காதே. உடலுக்குக் கெடுதல்' என்று சொன்னது உண்மைதான். நீ வராவிட்டால் இந்நேரம் என் உடல் என்ன பாடு பட்டிருக்கும்'' என்று முணுமுணுத்தது.

அன்று முதல் அவன் பகலில் தூங்குவதை விட்டு விட்டான். ஒரு மாதம் கழித்து அவன் வகுப்பு வாத்தியாரைச் சந்தித்துப் பேசினேன். அவர் சொன்னார், ''ஸார், உங்கள் தம்பி இப்போது வகுப்பில் தூங்குவது கிடையாது. அதனால் தானோ என்னமோ, கால் பரீட்சையில் கூட அதிக மார்க்குகள் வாங்கியிருக்கிறான்'' என்றார்.

அப்போது நான் அடைந்தச் சந்தோஷத்துக்கு அளவேது?



பண. அரங்கசாமி

"ராஜா, டேய் ராஜா, அங்கேயே நில்லுடா..."

'சடக்'கென்று திரும்பிப் பார்த்தான் ராஜன். வேகமாக வியர்க்க வியர்க்க ஓடி வந்தான் துரை.

"என்னடா துரை, என்ன விசேஷம்? ஏன் இப்படி வியர்க்க ஓடி வரே!" அவன் முகத்திலே ஆச்சரியம் குமிழியிட்டோடியது!

"ஆமாண்டா, நாளைக்கு மிட்லாண்டிலே 'கேப்டன் மார்வல்' ஓடப் போகிறது. முதல் டிக்கெட்....நம்முடையதாக இருக்க வேண்டும். என்ன?" அவனுக்கு மூச்சு முட்டியது!

"இந்தத் தடவை எங்கிட்டே காசு காலணுகூட இல்லேப்பா. நீதான் 'மானேஜ்' பண்ணிக்கணும்."

"என்னடா ராஜா, ஒரே யடியா அடிச்சுப் பேசறியே!"

"நான் என்னப்பா, செய்யறது? இந்த மாசம் சல்லிக் காசுகூடக் கொடுக்க முடியாதுன்னு அப்பா கண்டிப்பாகச் சொல்லிட்டார். ஆகவே என்னாலே...."

"முடியாதுன்னு சொல்றே, இல்லையா? அட போடா, பைத்தியம்! நான் சொல்றபடி செய்.... எல்லாம் சுலபமா முடியும்!"

"அதெப்படி துரை? சற்று விவரமாகத்தான் சொல்லேன்!"

ராஜனின் குரலில் ஆத்திரத்தோடு நிதானக் குறைவும் தென்பட்டது!

"அப்பா பணத்தை வைக்கிற இடம் உனக்குத் தெரியுமில்லே?"

"ஓ, தெரியும்!"

"அதுவே போதும்" என்று கூறிய துரைராஜ் சுற்று முற்றும் ஒரு முறை பார்த்துவிட்டுப் பிறகு சன்னமான குரலில் காதோடு காதாக ஏதோ ஒரு விஷயத்தைக் கூறினான்.

அதைக் கேட்ட ராஜனுடைய முகம் பீதியால் சாம்பல் போல வெளுத்துவிட்டது; அதைக் கவனித்தும் கவனிக்காத மாதிரியாக, "அப்போ, நான் போய் வறேன்! மறந்து விடாதே; பத்திரம்" என்று கூறிவிட்டு வேகமாகச் சென்று மறைந்தான் துரைராஜ்.

செதுக்கி வைத்த சிலை மாதிரி ஆடாமல் அசையாமல் நின்று விட்டான் ராஜன். எவ்வளவோ காரியங்களைத் துரை சொன்னது போலச் செய்துவந்த ராஜனுக்கு, இந்தக் காரியத்தைக் கேட்டதும் உடல் நடுக்கம் கண்டுவிட்டது. நடைபாதையிலே நின்றுகொண்டிருந்த ராஜன் திடுக்கிட்டுத் தன்னிலை வந்தான். சுற்று முற்றும் பார்த்தான். எல்லோரும் அவனையே பார்த்து முறைப்பது

போன்ற பிரமை ஏற்பட்டது. அர்த்தமில்லாமல் ஏதோ குற்றம் செய்தவனைப் போல் 'திரு திரு' வென்று விழித்தான். அந்த இடத்தை விட்டுச் சீக்கிரம் கிளம்பிச் சென்றால் தேவலை போல இருந்தது. எதையும் பார்க்கத் திராணி அற்றவனாக 'விடு விடு' வென்று வீட்டை நோக்கி நடந்தான்; இல்லை, அவன் கால்கள் தாம் பழக்கம் காரணமாக நடந்தன என்று சொல்ல வேண்டும்!

* * *

இரவு மணி இரண்டு என்பதை ஹால் சுவர்க் கடிகாரம் நிமோனியா ஜுரத்தில் அடிபட்டவன் இருமுவது போல இரண்டு முறை இருமி ஓய்ந்தது! தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்த ராஜன் மெல்ல எழுந்து உட்கார்ந்தான். போர்வையை ஒதுக்கித் தள்ளிவிட்டு 'விசுக்' கென்று எழுந்து நின்று சோம்பல் முறித்தான். அரை குறையாக அடைக்கலம் புகுந்திருந்த தூக்கமும் அவனை விட்டு ஓடிவிட்டது!

அடிமேல் அடி வைத்துச் சந்தடி எதுவுமில்லாமல் தன் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். ஹாலில் அவன் அப்பா அண்ணாசாமி ஆழ்ந்த தூக்கத்திலிருக்கிறார் என்பதை அவரது சன்னக் குறட்டை தெளிவாக எடுத்துக் காட்டியது. நிதானமாகத் தலைப் பக்கம் சென்று, பாதி தெரிந்தும் தெரியாததுமாக இருந்த சாவிக் கொத்தை மெல்ல உருவினான்.

மூலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெரிய கண்ணாடி பதித்த பீரோவை நெருங்கினான். பூட்டில் சாவியைப் பொருத்தினான். அவன் உடம்பு ஒரு முறை 'குப்'பென்று வியர்த்துக் கொட்டியது! மெல்லச் சமாளித்துக் கொண்டு நின்றான். அப்படியே திரும்பி விடலாமா என்று எண்ணினான். ஆனால் ஆசை சக்தி வாய்ந்த பசை அல்லவா? அதை அடக்க அடக்கத் தானே அதிகச் சக்தியோடு பீரிட்டு எழும்பும். அவன் என்ன புத்தரா! ஆசையை அவ்வளவு சீக்கிரமாக நினைத்தவுடனே அடக்கிவிட! கால்கள் தொய்ந்து விட்டன போன்ற பிரமை ஏற்பட்டது. ஆனால் ஏதோ ஒரு சக்தி அவன் உள்ளிருந்து ஊக்கி விடலாயிற்று.

'கடக்—'

சாவி, பூட்டைத் திறந்து விட்டது! அப்போது—

'பொத்'தென்ற ஓசை கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பி ஓசை வந்த பக்கம் பார்த்தான். உடம்பு 'கிடு கிடு'வென்று லேசாக நடுங்க ஆரம்பித்து விட்டது! மேல் விட்டத்திலே ஊர்ந்து சென்று கொண்டிருந்த பல்லி ஒன்று தவறிக் கீழே விழுந்து மெல்ல ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. அதைக் கண்ட ராஜனின் முகத்திலே லேசாகப் புன்னகை தோன்றி மறைந்தது. ''உஸ்....அம்மா!'' என்ற குரல் ராஜனைத் திடுக்கிட வைத்தது. மெல்லப் புரண்டு படுத்தார், அண்ணாசாமி. சப்த நாடியும் ஒடுங்கி விட்டது போன்ற உணர்ச்சி ராஜனுக்கு ஏற்பட்டு, மரம் போல உணர்ச்சி இல்லாமல் நின்றுவிட்டான்.

கஷ்டப்பட்டுத் தன் உணர்ச்சியெல்லாம் ஒன்று சேர்த்து நகர்ந்து பீரோவின் கதவைத் திறந்தான். கற்றை கற்றையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கரன்ஸி நோட்டுக்களில் ஒரு பத்து ரூபாய் நோட்டைமட்டும் உருவி எடுத்துக் கொண்டான். பிறகு பழையபடி பூட்டி, சாவியை அப்பாவின் தலையணையின் கீழ் வைத்தான்.

* * *

காலை மணி ஏழு. அலாரம் 'கண, கண'வென்று ஒலிக்க ஆரம்பித்தது! தூக்கம் விழித்த ராஜன் மெல்ல எழுந்து உட்கார்ந்து மணியைப் பார்த்தான். மணி ஏழாகி விட்டதைக் கண்ட ராஜன் 'கிடு, கிடு'வென்று கொல்லைப்புறம் நோக்கி ஓடினான்.

மணி ஓடுவது தெரியாமல் ஓடிக்கொண்டிருந்தது! சோபாவில் கதைப் புத்தகம் படித்துக்கொண்டிருந்த ராஜன் மணி இரண்டடிக்



கோபி: ஏண்டா கண்ணு, முன்பு எல்லாம் அடிக்கடி 'அப்பா திட்டுவார், அப்பா திட்டுவார்'னு சொல்வாயே, இப்பொழுது ஏன் நீ பயப்பட வில்லே?

கண்ணன்: எங்க அப்பாவுக் குத் தொண்டையிலே ஆப ரேஷன்டா. அதனுல்தான். ஒரு மாசத்துக்கு பேசத் தடை உத் தரவு போட்டிருக்கார் டாக்டர்!

---

கும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் துள்ளி எழுந்தான்.

'மேட்னி ஷோ' மூன்று மணிக்கு ஆயிற்றே! இப்போதிலிருந்து தயார் செய்து கொண்டால்தானே முடியும். சமையலறையை நோக்கி, ''அம்மா, அம்மா'' என்று கத்திய படி ஓடினுன்.

''அம்மா, என் சட்டைகளே வண்ணுன் கொண்டு வந்து கொடுத்து விட்டானு?''

''இல்லேயேடா, நாளேக்குக் கொண்டு வந்து தர்றேன்னு சொன் னுன்'' என்ருள் பாகீரதி அம் மாள் - அவன் தாயார்!

''துணியெல்லாம் ஒரே அழுக் காயிடுத்து!''

''அப்போ சோப்புப் போட்டு கசக்கு....''

''சரிதான், போம்மா; வேலே நிறைய இருக்கு!'' என்று முணு முணுத்தபடி கிணற்றங் கரைக்குப் போனுன். சொக்காய்த் துணிக்குச் சோப்புப் போட்டுத் துவைத்து வைத்துவிட்டு தன் அறைக்குத் திரும்பினுன். அவனுக்குக் காரண மில்லாமல் எரிச்சல் வந்தது.

மேஜை மீது குவிந்து கிடந்த சிறுவர் பத்திரிகைகளில் கைக்கு அகப்பட்ட ஒரு பத்திரிகையை எடுத்துப் புரட்டினுன். அந்தக் கதைக்குப் போடப்பட் டிருந்தப் படத்தைப் பார்த்ததும் அதைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் அவனுக்குத் தோன்றியது: சோபா வில் நன்ருகச் சாய்ந்துகொண்ட படியே படிக்க ஆரம்பித்தான்.

ஓர் இடத்திற்கு வந்த அவன் கண்கள் குத்திட்டு நின்றுவிட்டன: பத்திரிகையை மேஜைமீது வீசி எறிந்து விட்டுக் கிணற்றடிக்கு ஓடி னுன்: சட்டைப் பையைத் துழாவி னுன். அவன் கைக்கு ஏதோ தட்டுப் பட்டது! எடுத்துப் பார்த் தான். அவன் கையில் இருந்தது சிவப்பு நிற, கசங்கிக் கிழிந்த காகிதத் துண்டுகள்! ராஜனுடைய தலே சுழன்றது; கண்கள் இருண் டன. கண்ணீர் 'குபு குபு' வென்று கொட்ட ஆரம்பித்து விட்டது! தலேமீது கை வைத்த படி உட்கார்ந்து விட்டான்.

எவ்வளவு நேரம் அப்படி உட் கார்ந்துகொண் டிருந்தானே, அவ னுக்கே தெரியாது! அவனது அலே பாயும் மனம் ஒரு நிலேக்கு வர வெகு நேரமாயிற்று!

* * *

உடுப்பி ஓட்டலின் முன் பொறுமையில்லாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண் டிருந்தான் துரைராஜ். ஓட்டலின் சுவரில் மாட்டப்பட் டிருந்த கடிகாரம்கூட அவனது நிலேயைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டது!

அவன் நெஞ்சு, 'சொன்னால் சொன்னபடி வருவது கிடையாது. மணி ஐந்தரை ஆகிவிட்டது' என்று பொருமியது! பொறுமை சிறுகச் சிறுக விடைபெற்றுச் செல்ல ஆரம்பித்து விட்டது. அதற்கு மேலும் அவனால் அங்கே ராஜனை எதிர் பார்த்தபடி இருக்க முடியவில்லை! ராஜனுடைய வீட்டை நோக்கி வேகமாக நடக்கலானான்.



கவனமாகப் படித்துக் கொண்டிருந்த ராஜனைத் துரைராஜின் குரல் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கச் செய்தது!

''என்ன பிரதர், இங்கேயே உட்கார்ந்து விட்டாயே! நம்ப பிளான் கவனமில்லையா?''

''பரீட்சை நெருங்கி விட்டது துரை! ஊர் சுற்றிவிட்டு வந்தால் பரீட்சையில் பாஸ் செய்ய முடியுமா?''

''அடடே! முன்னேற்றம் ரொம்பத்தான் போலிருக்குது! அட சரிதான், வாப்பா! இத்தனை நாள் படிக்காமெ சுற்றிவிட்டு, கடைசிக் காலத்திலே விழுந்து விழுந்துப் படிக்கிறான்.''

''துரை, இன்றைய பிளான் இனிமே நடக்கவே நடக்காது! திருட்டு உடமை தங்கி நிற்கவே நிற்காது, பிரதர்?......

''அட, சொல்வதை விவரமாகத் தான் சொல்லி அழேன்!'' என்றான் துரை எரிச்சலோடு!

''விவரமாகச் சொல்லி விடறேன். நீ சொன்னதுபோல எப்படியோ கஷ்டப்பட்டு பத்து ரூபாய் எடுத்து விட்டேன். சலவைச் சட்டை வராத ஆத்திரத்திலே அழுக்குச் சட்டைக்குச் சோப்புப் போட்டேன். கவனப் பிசகாக ரூபாய் நோட்டை எடுத்து வைக்க மறந்துவிட்டேன். ரூபாய் நோட்டு கூழாகப் போய்விட்டது! நேற்று நான் செய்ததுதான் முதல் திருட்டு; ஆனால் அதுவேதான் என்னுடைய கடைசித் திருட்டும்! இனிமேல் நான் அந்தத் திருட்டு ஜோலிக்கே போகமாட்டேன். துரை, கொஞ்சம் யோசித்துப் பார்! நம் வீட்டில் நம்மை எதற்காகப் படிக்கவைக்கிறார்கள்? இந்த மாதிரி ஊர்ச் சுற்றி ஊதாரியாக இருக்கவா? 'என்னடா இவன் இப்படிப் பேசுகிறானே' என்று நீ எண்ணலாம், நம் பெற்றோருக்கு நாம் செய்யும் கைம்மாறு இது தானா?'' ராஜன் கூறியவற்றைத் துரை சற்றுப் பொறுமையாகச் சிந்தித்துப் பார்த்தான். அனைத்தும் உண்மையாகவே தோன்றின. கண்களில் கண்ணீர் மல்கத் தன் தவற்றுக்காக அழுதான் துரை.

''துரை, என் கண்களைத் திறந்து வைத்தது அந்தப் பத்து ரூபாய் நோட்டுதான். இனி நாம் நல்லவர்களாக மாறி விடுவோம். நாம் செய்த தவறுகளுக்கு பெற்றோரிடம் மன்னிப்புக் கேட்போம், வா!'' என்று கூறி முடித்தான் ராஜன்.

அதே சமயம் அதுவரை அவர்கள் பேசியதைக் கேட்டபடி கதவின் பின்புறம் நின்றுகொண்டிருந்த அண்ணாசாமி 'சரே'லென்று உள்ளே நுழைந்தார். அவர், தப்பை உணர்ந்து திருந்தியதற்காக அவர்களைப் பாராட்டினார்.




## நிலையும் சிறப்பும்

**'பிருந்தாவனன்'**

சேற்றில் வளரும் தாமரை
சிறந்து விளங்கும்! அதனையே
ஆற்று மணலில் வைப்பரேல்
அது வளர்ந்து பூக்குமோ? 1

காட்டில் வாழும் புலிதனைக்
கட்டி இழுத்து வீட்டினுள்
கூட்டி வந்தால் அதனிடம்
கோபக் குணம் அகலுமோ? 2

நாலு காலும் நொண்டியாய்
நடந்திடாத மாட்டினை
கோலு கொண்டு விரட்டினால்
கொஞ்ச மேனும் நகருமோ? 3

கொடிய பாம்பு ரத்தினம்
கொடுக்குமென்று அதனையே
மடியில் வைத்துக் கொஞ்சுதல்
மனிதர் யாரும் செய்வரோ? 4

எந்தப் பொருளே ஆயினும்
ஏற்ற இடத்தில் இருப்பதே
இந்த உலகில் உயர்வென
இன்றே தெரிந்து கொள்ளுவோம். 5

# இளவரசி குமுதவல்லி

**எ. ந. கணபதி**

இளவரசி குமுதவல்லி பேரழகி! அவளை மணம் செய்து கொள்ள ஏராளமான அரசர்கள் போட்டி போட்டார்கள். எனவே அவளுடைய தந்தையான கேகய நாட்டு மன்னருக்குப் பெருத்த சங்கடம் உண்டாயிற்று.

சஞ்சலத்தோடு அமர்ந்திருந்த தந்தையிடம் வந்தாள் குமுதவல்லி. அவரது மனக் கவலையையும் வருத்தத்தையும் எப்படியாவது போக்க வேண்டுமென்று விரும்பினாள்.

''அப்பா, நான் ஒரு யோசனை சொல்கிறேன்'' என்றாள் அவள்.

''என்ன யோசனை?'' என்று கேட்டார் அரசர்.

''ஒரு மானின் படம் ஒன்று வரையும்படி ஆஸ்தான ஓவியரிடம் கட்டளையிடுங்கள். ஐம்பது கெஜ தூரத்துக்கு அப்பால் நின்று, எந்த அரசர் அந்த மானின் இடது கண்ணைக் குறிபார்த்து ஒரே அம்பில் எய்கிறாரோ அவருக்கு என்னை மணம் செய்து கொடுப்பதாக விளம்பரம் செய்து விடுங்கள்'' என்றாள் இளவரசி.

அரசரும் தன் மகளின் யோசனையை ஒப்புக்கொண்டார்.

ஆஸ்தான ஓவியர் அழகான மானின் படத்தை வரைந்து அனுப்பினார். எல்லா மன்னர்களுக்கும் சுற்றறிக்கையையும் கேகய மன்னர் அனுப்புவித்தார்:

கேகய நாட்டுக்கு அண்டையிலுள்ள ஜாம்ப நாட்டு இளவரன் ஜம்புநாதன் வில்வித்தையில் அர்ஜுனனுக்கு நிகரானவன். அவனையே மணம் செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் இளவரசி குமுதவல்லியின் அந்தரங்கமான ஆசை, ஆனால் அவளது தந்தைக்கு அவனை ஜம்புநாதனுக்குக் கொடுப்பதில் அவ்வளவாக இஷ்டமில்லை. அதனால் இப்படி ஒரு போட்டி ஏற்படுத்தினால், அதில் ஜம்புநாதன் தான் நிச்சயமாக ஜயிப்பான். தான் அவனை மணந்துகொள்ளலாம் என்ற எண்ணத்தினால்தான், தன் தந்தையிடம் மேற்படி யோசனையைக் கூறினாள்.

குறிப்பிட்ட நாள் வந்தது. பல நாட்டு மன்னர்களும் இளவரசர்களும் போட்டியில் கலந்து கொள்வதற்காகக் கேகய நாட்டில் வந்து




தகப்பனார்: ரகு! டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டாடா, இது? என்னமோ கிறுக்கின்னாடா இருக்கு?


ரகு: அவருக்குக் கடுமையான குளிர் ஜுரமாம்ப்பா!

எஸ். வி. ஜயம், மாயூரம்.

கூடினூர்கள். ஒவ்வொருவரும் தானே போட்டியில் வெற்றி பெற்று இளவரசியை மணம் செய்து கொள்ளவேண்டும் என்று பேராவலுடன் இருந்தனர்.

போட்டி ஆரம்பமாகியது. முதலில் முல்லை நாட்டு மன்னர் அம்பு எய்தார். அது மானின் பின்னங்கால் ஒன்றில் போய்த் தைத்தது! முல்லை நாட்டு மன்னர் தலை கவிழ்ந்தார். சபை கொல் லென்று நகைத்தது.

கேகய மன்னரும், இளவரசி குமுதவல்லியும், போட்டி நட வடிக்கைகளை மிக உன்னிப்பாகக் கவனித்துக்கொண் டிருந்தனர். இளவரசியின் கண்கள் ஜம்புநாத னின் வருகையை வெகு ஆவ லுடன் எதிர்பார்த்துக்கொண் டிருந்தன.



ஒவ்வொரு மன்னராக அம்பெய்தனர். அம்புகள் மானின் கால்களிலும், விலாவிலும், வாலிலும் தைத்தனவே ஒழிய ஒன்றாவது மானின் இடது கண்ணின் பக்கத்தில்கூடத் தைக்கவில்லை. ஒவ்வொரு அரசர் தோல்வியடையும்போதும் சபையில் ஏளனமான சிரிப்பொலி எழுந்துகொண் டிருந்தது.

ஆயிற்று; இன்னும் ஒரே ஒரு மன்னர்தான் பாக்கி. அவர் ஒரு வயதான கிழவர் என்பதை இளவரசி பார்த்தாள். அப்படியானால் ஜம்புநாதன் போட்டிக்கே வரவில்லையா? அவள் உள்ளம் பதறியது.


அந்தக் கிழ மன்னர் நடப்பது கூடத் தள்ளாடித் தள்ளாடி நடந்தார். சபையில் அந்தக் கிழவரின் ஆசையைப் பார்த்து எல்லோரும் ஏளனமாகச் சிரித்தனர்.

''இவர்தான் ஜாம்ப நாட்டு மன்னர் சத்தியானந்தர்'' என்று கேகய மன்னரிடம் சொன்னார், சேனாதிபதி.

இளவரசி இதைக் கேட்டதும் திடுக்கிட்டாள். இளவரசன் ஜம்புநாதனின் தந்தையா இவர்? தம் மகனை அரசாட்சியைக் கவனிக்கச் சொல்லிவிட்டு, தாம் இந்தப் போட்டிக்கு வந்திருக்கிறார் என்பதை ஊகித்த இளவரசி பெருத்த மன வருத்தமடைந்தாள். 'இருந்தாலும் என்ன? அவரால் மானின் இடது கண்ணில் அம்பெய்ய முடியவா போகிறது?' என்று எண்ணினாள்.

ஆனால் இது என்ன? அந்தக் கிழ மன்னரின் அம்பு 'விர்' ரென்று சென்று மானின் இடது கண்ணிலே பாய்ந்துவிட்டதே!

சபையில் எல்லோரும் திடுக்கிட்டனர். குமுதவல்லியின் உள்ளம் குமுறியது. கடைசியில் அவள் இந்த வயதான கிழவருக்குத்தான் மாலையிட வேண்டுமா? அவள் தலைவிதி இப்படியா இருக்க வேண்டும்? ஐயோ, பாவம்! அவள் கண்கள் கண்ணீரைத் தாரை தாரையாகச் சொரிந்தன.



கேகய மன்னரோ நடந்த செயலைக் கண்டு திடுக்கிட்டு, இனி நடக்கப் போவதை நினைந்து மனம் பதறிக் குழப்பமடைந்து செய்வதறியாது நின்றார்.

இந்தச் சமயத்தில், அழகிய இளவரசியை ஒரு கிழ மன்னர் மணப்பதா என்று அந்தக் கிழ மன்னரின் மேல் அடங்காத கோபமடைந்த வீரனொருவன் அவரை நோக்கி வேகமாகப் பாய்ந்தான்; மறுகணம் வெற்றிக் களிப்புடன்

நின்றுகொண் டிருந்த ஜாம்ப நாட்டு மன்னரின் கன்னத்தில் பளீரென்று ஓங்கி ஓர் அறை கொடுத்தான்!

அப்போதுதான் இன்னொரு அதிசயம் நடந்தது!

கிழ மன்னரின் தாடி அந்த வீரனின் கையுடன் வந்துவிட்டது! கூனித் தள்ளாடி நின்றிருந்த மன்னர் நிமிர்ந்து கம்பீரமாக நின்ருர்! கிழ மன்னர் நின்ற இடத்திலே இப்போது அழகிய இளம் வீரன் ஒருவன் நின்ருன்!


''ஆ! ஜம்புநாதனு!....'' என்று இளவரசி தன்னை மறந்து கூவிவிட்டாள். கேகய மன்னரும், சபையில் மற்றவர்களும் வியப்புக் கடலில் ஆழ்ந்தார்கள்.

ஆம். இளவரசன் ஜம்புநாதன் தான் இப்படி எல்லோரையும் திகைக்க வைத்து வேடிக்கை பார்க்க வேண்டுமென்றே கிழவர் வேஷம் போட்டு வந்திருந்தான். வேஷம் மிகவும் பொருத்தமாக இருந்தபடியால் அவனது தந்தை யாரைப் போல் தோன்றவே, எல்லோரும் ஏமாந்து விட்டனர்.

இளவரசி குமுதவல்லியின் உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திக்கு முக்காடியது. அவளது கண்கள் ஆனந்தத்தால் மலர்ந்தன. கடைசியில் அவளது ஆசை நிறைவேறிவிட்டதல்லவா?

# எண்ணிலே படங்கள்

1 முதல் 9 வரையில் ‘மூட்டை’



# அரசனும் வேலைக்காரனும்




ராஜி

பல வருஷங்களுக்கு முன் ராம் சிங் என்ற சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் ஆண்டு வந்த அதே நகரில் கோபால் என்ற ஒரு வாலிபனும் வசித்து வந்தான். கோபால் என்பவனுடைய தகப்பனார் அவ்வூரிலே மிகவும் பெயர் பெற்ற ஒரு நீதிபதியாக வேலை பார்த்து வந்தார். அவர் நீதி வழங்குவதில் மிகவும் நேர்மை வாய்ந்தவர் என்றும் நெருங்கிய நண்பனாக இருந்தாலும் நீதி வழங்குவதில் ஆளுக்கு ஆள் வித்தியாசம் பாராட்ட மாட்டார் என்றும் எல்லாருக்கும் தெரியும். சிற்றரசன் ராம்சிங்கும் கோபாலனின் தகப்பனாரும் மிகவும் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள்.

கோபால் நீதிபதியின் ஒரே மகன். கோபாலின் சிறுவயதிலேயே நீதிபதி இறந்துவிட்டார்: அதனால் கோபாலனை வளர்க்கும் பொறுப்பு அவன் தாயாருக்கு ஏற்பட்டது. கோபாலுக்குப் பதினெட்டு வயது நிரம்பியவுடன் அவன் தாயார் அவனைக் கூப்பிட்டு, ''அப்பா, எனக்கோ மிக

வும் வயதாகிவிட்டது. உன்னை இது வரையிலும் படிக்க வைத்ததற்கு உன் தகப்பனார் சேகரித்து வைத்த பணம் யாவும் செலவழிந்து விட்டது. இப்பொழுது நாம் வறுமையினால் கஷ்டப்படுகிறோம். மேலே உன்னைப் படிக்க வைப்பதற்குப் பணம் இல்லை. இவ்வூர் அரசன் ராம் சிங்கும் உன் தகப்பனாரும் நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள். உன் தகப்பனார் அரசனுக்குப் பல விதத்தில் உதவி செய்திருக்கிறார். சுருங்கச் சொன்னால் உன் தகப்பனாரைக் கலந்து கொள்ளாமல் அரசன் எந்தக் காரியத்தையும் செய்யத் துணிவதில்லை. ஆதலால் நீ அரசனிடம் சென்று அவருக்குப் பழைய சமாசாரங்களை ஞாபக மூட்டி ஏதாவது பொருளுதவி தேடிக்கொண்டு வா'' என்றாள். தாயார் சொன்னதைக் கேட்ட கோபாலின் உடல் நடுக்கம் அடைந்தது. ''அம்மா, நானோ ஏழைச் சிறுவன். நான் எப்படி இவ்வூர் அரசனைப் பார்க்க முடியும்? வேண்டாம், அம்மா. பொருள் சம்பாதிக்க வேறு ஏதாவது வழியை நாடலாம், அம்மா!'' என்றான்.

''கோபால்! வேறு ஒரு வழியும் எனக்குத் தள்ளாத வயதில் தோன்றவில்லையே! நீ ஒன்றுக்கும் பயப்படாதே. தைரியமாக அரசனிடம் சென்று நீ யார் என்பதைத் தெரியப்படுத்து. உனக்குக் கட்டாயம் உதவி புரிவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டாகிறது. தைரியமாகப் போ'' என்று தாயார் சொல்லவே, கோபால் தன்னுடைய தாயின் வார்த்தையைத் தட்டாமல் குடும்ப நிலைமையையும் உத்தேசித்துத் தைரியமாக அரண்மனையை நோக்கிச் சென்றான்.

தன்னுடன் நெருங்கிய நண்பனாக இருந்த நீதிபதியின் புதல்வன் கோபால், தன்னைச் சந்திக்கும் பொருட்டு வந்திருக்கும் செய்தியைக் கேட்ட அரசன் சந்தோஷம் கொண்டு, ஓடோடியும் சென்று கோபாலை வரவேற்றான். ''கோபால், நானும் உன் தகப்பனாரும் மிகவும் நெருங்கிய நண்பர்களாக இருந்தோம். துரதிருஷ்ட வசமாக அவர் இறந்து விட்டார். அவருடைய ஒரே மகனாக இருக்கும் நீ இந்த ஊரிலேயே வசித்து வந்துகொண்டிருக்கிறாய் என்பது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் உன்னை முன்கூட்டியே அரண்மனைக்கு அழைத்து வந்திருப்பேன். நீ மிகவும் களைப்புற்றிருக்கிறாய். உள்ளே வா'' என்று கோபாலை அரசன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். அங்கே அவனை அரசன் தன் சிம்மாசனத்துக்குப் பக்கத்தில் அமரச் செய்தான். உடனே பல வித சிற்றுண்டிகள் கொண்டு வரப்பட்டன. கோபால் சிற்றுண்டிகளைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது அவனுக்கு மரியாதைகள் செய்வதுபோல அரசன் அரண்மனை நாட்டியக்காரிகளை விதவிதமான நடனங்கள் ஆடச் செய்தான். நடனம் முடிந்தவுடன் அரசன் கோபாலைப் பார்த்து, ''கோபால். உனக்கு மரியாதைகள் யாவும் எப்படி நடந்து வருகிறது, பார்த்தாயா?'' என்று கேட்டான். உடனே கோபால் எழுந்து நின்று கை கூப்பி, ''அரசே, இங்கே நடந்தவைகள் யாவையும் என்னாலேயே நம்ப முடியவில்லை. நீங்கள் எனக்கு இவ்வளவு மரியாதைகள் செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இதிலிருந்து என் தகப்பனாரிடம் நீங்கள் எவ்வளவு அன்பு கொண்டிருந்தீர்கள் என்று நன்றாகத் தெரிகிறது'' என்றான்.

''கோபால். உனக்கு நீந்தத் தெரியுமா?'' என்று கேட்டான் அரசன்.

''அரசே, எனக்கு மிகவும் நன்றாக நீந்தத் தெரியாவிட்டாலும் சுமாராக நீந்துவேன்; ஏன்; என்ன வேண்டும்?'' என்று பதில் சொன்னான் கோபால்.

கோபால் ஒன்றுமில்லை; அரண்மனை நந்தவனத்திலுள்ள குளத்திற்குப் போகலாம். அது அரண்மனையில் தங்கும் முக்கிய விருந்தினர்கள் நீந்திக் குளிப்பதற்கென்றே பிரத்தியேகமாகக் கட்டப்பட்டிருக்கிறது; வா போகலாம்'' என்று அரசன்



சொல்லவே, கோபால் அரசனுடன் போனான். அரசன் அரண்மனைக்குள் எங்கே சென்றாலும் அவனுடன் கூட ஓர் அந்தரங்கச் சேவகன் செல்வது வழக்கம். அதைப் போலவே பலேசிங் என்ற பெயருள்ள ஒரு சேவகன் அரசனைப் பின்தொடர்ந்து சென்றான்.

அரசன் அரண்மனை நந்தவனத்திலுள்ள குளத்திற்குச் சமீபத்தில் சென்றவுடன், ''கோபால், எவ்வளவு அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது இந்தக் குளம், பார்த்தாயா? குளம் சற்று அகலமாகத் தோன்றிய போதிலும் பயப்பட வேண்டாம்: ஆழமே இல்லை. அடிக்கடி பழைய தண்ணீரை வெளியே போகச்செய்து அருகிலுள்ள ஏரியிலிருந்து புதிய தண்ணீரைக் குளத்தில் பாயச் செய்வேன்: அதோ தெரிகிறதே, இரண்டு சிறிய மதகுகள். அவைகளில் ஒன்று பழைய தண்ணீரை வெளியே போகச் செய்வதற்கும் மற்றொன்று புதிய தண்ணீரை உள்ளே விடுவதற்காகவுமே ஏற்படுத்தி இருக்கிறார்கள். கோபால், எங்கே, நீ குளத்தில் இறங்கி நீந்து பார்க்கலாம். நான் கரையிலிருந்து நீ எப்படிச் சாமர்த்தியமாக நீந்துகிறாய் என்று கவனிக்கிறேன்'' என்றான் அரசன்.

அரசன் சொன்னது அவனுடன் வந்த சேவகன் பலேசிங்குக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. 'இது என்ன, அரசனுக்கு வேண்டாத விரோதிகளை அல்லவா இந்தக் குளத்தில் இறங்கச் செய்வார்கள்!' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.

''அரசனுடன் நெருங்கிய நண்பனான நீதிபதியின் புதல்வனை எதற்காக அரசன் இந்தக் குளத்தில் இறங்கச் செய்கிறான்? சற்று நேரத்திற்கெல்லாம் குளத்திலுள்ள கொடிய முதலைகள் கோபாலின் உயிரை மாய்த்துவிடுமே!'' என்று ஆச்சரியத்துடன் கோபாலைப் பார்த்துக்கொண்டே இருக்கும் சமயத்தில், கோபால் திடீரென்று குளத்தில் குதித்தான். நீந்தியபடியே பாதிக் குளத்தைத் தாண்டிக்கொண்டிருந்தான். அரசன் அதைப் பார்த்துச் சந்தோஷம் கொண்டவன்போல் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்யத் தொடங்கினான்.


குளத்திற்கு நடுவில் நீந்திச் சென்றுகொண்டிருந்த கோபால் திரும்பி, ''அரசே, அரசே, என்னைக் காப்பாற்றுங்கள். என்னை நோக்கி முதலைகள் துரத்திக் கொண்டு வருகின்றன'' என்று கத்திக்

கொண்டே வெகு வேகமாக அரசன் நின்றுகொண்டு இருக்கும் கரையை நோக்கி நீந்தி வந்தான். கோபாலைப் பார்த்த அரசன் வருத்தமடையாமல், ''ஹி.ஹி.ஹி'' என்று சிரித்தான். பிறகு தனது இடுப்பில் செருகி யிருந்த கத்தியை எடுத்து உருவிய வண்ணம் ''கோபால், நீ குளத்திலேயே இரு. நீ கரையை அடைந்தால் இதோ இருக்கும் என் கத்தியால் உன்னை வெட்டி விடுவேன்'' என்று கோபத்தினால் கர்ஜித்தான். திடீரென்று அரசன் கோபித்துக் கொண்டதை அறிந்த கோபால், ''அரசே, திடீரென்று என்மீது ஏன் கோபிக்கிறீர்கள்? நான் உங்களுக்கு என்ன கெடுதி செய்தேன்!'' என்று அலறினான். உடனே அரசன், ''நீ எனக்குக் கெடுதி செய்யாவிட்டால் உன் தகப்பனார் எனக்குச் செய்த கெடுதிக்குப் பழிக்குப் பழி வாங்க எனக்கு இப்பொழுதான் சந்தர்ப்பம் கிடைத்தது. உன் தகப்பனார் நீதிபதியாக இருக்கும்பொழுது என்ன செய்தார், தெரியுமா? என்னுடைய ஒரே சகோதரன் ராணுசிங் தனது வேலைக்காரனை அடித்துக் கொன்றதற்காக அவனுக்குத் தூக்குத் தண்டனை விதித்தார். என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள உன்னை இப்பொழுது வேணும் என்றேதான் இந்தக் குளத்தில் உன்னை நீந்தச் செய்தேன். முதலைகளுக்கு உன்னை இரையாக்கப் போகிறேன். நீ கரை மேல் ஏறினால் உன்னை....'' என்று அரசன் சொல்லிக்கொண் டிருக்கும்பொழுது அரசனுக்குப் பின்னால் நின்றுகொண் டிருந்த சேவகன் பலேசிங் எதிர்பாராத விதமாக அரசனைக் குளத்தில் தள்ளினான். குளத்தில் விழுந்த அரசன், ''என்ன, பலே சிங்..'' என்று தண்ணீரைக் குடித்தபடி மூச்சுத் திணறச் சொல்லிக்கொண்டே கரை ஏறுவதற்குப் பிரயத்தனம் பண்ணும் சமயத்தில், ''அரசே, நீங்கள் கரை ஏறுவதற்குப் பிரயத்தனம் செய்தீர்களேயானால் இதோ இருக்கும் என் கத்திக்கு இரையாவீர்கள். உங்கள் சகோதரனிடம் சேவகனாக வேலை பார்த்து வந்த எனது தகப்பனாரை உங்கள் சகோதரன் அடித்துக் கொன்றுவிட்டான். அதற்காகப் பரிந்து பேசும் உங்களையும் இப்பொழுது முதலைகளுக்கு ஆகாரமாகக் கொடுத்து, பழிக்குப் பழி வாங்கப் போகிறேன்'' என்று கோபத்தினால் கத்தினான்.

பலேசிங் சொன்ன வார்த்தைகளால் அரசனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் தவற்றை உணர்ந்து கோபாலனிடமும் பலேசிங்கிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பிறகு பலேசிங் அரை நொடியில் இருவரையும் முதலைகளிடமிருந்து காப்பாற்றிக் கரை சேர்த்தான். அரசனுக்குப் புத்தி வந்தது, கோபாலுக்கு ஏராளமான பொருள் உதவி செய்து அனுப்பி வைத்தான்.

---


## படத்திலே புதிர்





'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்பது வழக்கு. ஆனால் இந்தக் கருவியின் பாகங்கள் ஒன்று பட்டால் உண்டாவது பிளவுதான். அந்தக் கருவி என்ன?

விடை காண ஒன்று முதல் இருபத்தாறு வரை வரிசையாக எண்களை நேர்க் கோட்டால் ஒன்று சேர்த்துப் பார்.


புலிக்குட்டி ரதத்தை ஓட்டிச்செல்ல, அரசகுமாரி உள்ளே
உட்கார்ந்து அவனையே கவனித்துக் கொண்டிருக்கிறாள்.....


பெண்மணி எங்கே போக வேண்டும்?
தங்க இளவரசியைக் காணப் புறப்பட்டேன். கள்வர்கள் கையில் சிக்கி விட்டேன். அதனால் பல்லவக் கோட்டைக்கே திரும்பி விடுகிறேன்...


ரதம் பல்லவக் கோட்டைக்குச் செல்லும் பாதையில் செல்கிறது.....


பெயர் அபராஜிதர் வாம்! அழகான பெயர். என்னைப் பார்த்தால் பல்லவ அரசியே மதுராந்தகன் என்று ஏமாந்து போவாளாம்! நான் அப்படியா இருக்கிறேன்?
என் பெயரைக் கேட்டீர்களே! உங்கள் பெயர்?
பல்லவ வேங்கை!
பல மைல் தூரம் சவாரி செய்த பிறகு, மாலை மஞ்சள் வெயிலில் பல்லவர் கோட்டையும் அதன் முன்னே பெரும் அகழியும் அதைக் கடக்கும் முன் வாயிலும் தெரிகின்றன . . . . . . . . . . . .
கோட்டையின் மீதுள்ள காவலாளி ரதத்தைப் பார்த்ததும் கொம்பு ஊதுகிறான். பாலம் அகழியின் மீது அமைகிறது ... ரதம் உள்ளே நுழைந்ததும் . . . . . .
அதோ, பல்லவர் கோட்டை!

(தொடரும்)




# வேலைக்கார ராஜாசாமி

**பூரம்**

ராம்ஜி சேட் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கணக்குகளைப் புரட்டிக்கொண்டிருந்தார். வேலைக்கார வேலு எதிரில் வந்து நின்றான்.

''யாரோ ராஜாசாமியாம்! உங்களைப் பார்க்க வேண்டுமாம். உங்கள் பிறந்த ஊரிலிருந்து வந்திருக்கிறான். உங்களுடைய பழைய வேலைக்காரன் என்று சொல்லிக் கொள்கிறான் ....''

''சரி; இருக்கச் சொல்; வருகிறேன்!'' என்றார் சேட்.

அவருடைய நினைவுகள் பின்னோக்கி இழுத்தன. அவருடைய பிறந்த ஊராகிய ஆமதாபாத்தை விட்டு வந்து நாலைந்து மாதங்களாகிவிட்டன. தாயார், மனைவி, குழந்தைகள் எல்லோரைப் பற்றிய நினைவும் வந்தது. அவர்கள் எல்லாம் என்ன ஆனார்களோ! ஏதோ வீட்டில் சச்சரவு காரணமாகத் தன் தாயார், மனைவி, பிள்ளை எல்லோரையும் பிரிந்து வந்துவிட்டார் சேட்ஜி. வேலைக்காரன் ராஜாசாமி வந்திருக்கிறான் என்றதும் தன் பழைய விரோதத்தை மறந்து, தன் குடும்பத்தாரைப்பற்றி அவனிடம் விசாரிக்க வேண்டும் என்று தோன்றியது.

கணக்குப் புத்தகங்களை மூடி வைத்துவிட்டு வாசலுக்கு வந்தார். வாசலில் ராஜாசாமி கூர்ச்சம் போல் நின்றுகொண்டிருந்தான்.

''வாப்பா! ராஜாசாமி! ஊரில் ஏதாவது விசேஷம் உண்டா?'' என்று விசாரித்தார் சேட்ஜி.

''நான் உங்களைப் பார்ப்பதற்காகவே புறப்பட்டு வந்தேன். ஊரில் தாங்கள் செல்வமாக வளர்த்து வந்த நாய் 'டிம்மி' இறந்து போய்விட்டது'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான் ராஜாசாமி.

''ஐயோ! நாய் போய்விட்டதா? . . ஐயோ . . டிம்மி! . . நாய் எப்படியப்பா செத்தது?''-பரபரப்புடன் கேட்டார் சேட்ஜி.




தகப்பனார்: ஏண்டா, இன்னிக்குத்தான் ஸ்கூல் கிடையாதே, நீ புஸ்தகத்தை எடுத்துண்டு எங்கேடா 'ஜாலியா' கிளம்பிட்டே?'

பையன்: ஆபீஸ் இல்லாத நாளெல்லாம் நீ மட்டும் ஜாலியா ஆபீஸுக்குப் போறியே, அதே போல நானும் பள்ளிக்கூடம் கிளம்பிட்டேன்.

எஸ். கிருஷ்ணமூர்த்தி, பம்பாய்.

---

''இறந்து போன உங்கள் வண்டி மாட்டின் இறைச்சியைத் தின்றதால் இறந்து போயிடுச்சுங்க!''

''ஐயையோ!..என் வண்டி மாடுமா இறந்து போய்விட்டது?.. அது எப்படி இறந்தது?''

''ஆகாரமில்லாமல் இறந்து போய்விட்டது!''

''ஆகாரமில்லாமல் போவானேன்? இரண்டு பெரிய வைக்[illegible] போர் இருந்[illegible]!''

''[illegible] பெரும்[illegible]கும் தீப்பிடித்து [illegible]ஞ்சு போச்சுங்க!..பாக்கியை [illegible]ங்க தாயார் செத்ததற்காக உபயோ[illegible]ச் சுட்டாங்க!''

''ஐயையோ! ராஜாசாமி!.. என் தாயருமா இறந்துபோய்விட்டாங்க!..ஐயோ! அம்மா! நான் என்ன செய்வேன்! என் தாயார் எப்படியப்பா இறந்தாங்க?''

''உங்களுடைய பிள்ளையான கைக்குழந்தை இறந்து போனதாலும் தங்களைப் பிரிந்த துக்கத்திலும் மனம் உடைந்து இறந்து போயிட்டாங்க!..''

''ஹா!..என் குழந்தையுமா இறந்து போய்விட்டது!..ஐயோ! ..தெய்வமே!.. இனி என்னப்பா செய்வேன்? குழந்தைக்கு என்ன நோய்?''

''போதுமான கவனிப்பும் போஷணையும் இல்லாததால்தான் குழந்தை போயிடுச்சுங்க. உங்கள் மனைவி இருந்தவரையில் குழந்தையை நன்றாகக் கவனிச்சு அன்போடு வளர்த்தாங்க! அவர்கள் இறந்தபின்....''

''ஐயோ!....ஐயோ! ராஜா சாமி!..இது என்ன கொடுமை!.. என் மனைவியும் போய்விட்டாளா?....நான் எவ்வளவு துர்ப்பாக்கியசாலி!..என் தாயார், மனைவி, குழந்தை எல்லோரையும் ஒரே சமயத்தில் இழந்து விட்டேனே!.. ராஜாசாமி!.. ஊருக்குச் சென்று வீட்டிலாவது அழுது புரளவேண்டியதுதான், வா!.. போவோம்.''

''எசமான்! தங்கள் விரோதிகள் வீட்டையும் சொத்துக்களையும் அபகரித்துக் கொண்டுவிட்டார்கள். நான் இருந்த வரையில் அவர்கள் மூச்சுக் காட்டவில்லை. நானும் இறந்து விட்டேனு? உங்களை பிடித்துக் கொன்று விடுவதற்காகத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால்தான் ஓடிவந்தேன்....'' என்று முடித்தான்.

''அட பாவி, நீயும் இறந்துவிட்டாயா! உனக்குமா இந்தக் கொடுமை?'' என்று சொல்லி மூர்ச்சித்துப் போனார் சேட்ஜி.

2/1803
சென்னை-600 [illegible]

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM, [illegible] M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4, ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

## கிளேக் கழகம்

திருவையாறு கண்ணன் கிளேக் கழக 4 - ஆவது ஆண்டு விழா புஷ்ய மண்டபத்துறை இலவச வாசகசாலேயில் உயர் திரு ஆர். ராமநாத ஐயர் அவர்கள் தலேமையில் நடைபெற்றது. உயர் திரு பி. நாராயண ராவ் (Junior Deputy Inspector of Schools) போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளே வழங்க, கூட்டம் சிறப்புற நடந்தது.

## பேஞ நண்பர்கள்

1. D. சசிகாந்தன், 11. ஸ்ரீபுரம் முதல் தெரு, ராயப்பேட்டை, சென்னே - 14.
2. V. ஸ்ரீநிவாஸன், மூன்ரும் படிவம்—B. போர்டு உயர் நிலேப் பள்ளி, அறந்தாங்கி.
3. T. R. ஷண்முகசுந்தரம் T. 337, ரெயில்வே காலனி, கூடல்மாநகர், மதுரை.
4. தில்லே நெடுமாறன், 5 - ஆம் படிவம், இ - பிரிவு, திரு: விசாலாட்சி கலாசாலே இல்லம், ஆ. தெக்கூர், ராமநாதபுரம் ஜில்லா.
5. P. கோபாலகிருஷ்ணன், 59, கண்டித் தெரு, கம்போலா, இலங்கை.

---

# கண்ணன் வெளியீடுகள்

குழந்தைகளுக்கான கண்ணன் வெளியீடுகள் பெயர் பெற்றவை. அரிய விஷயங்கள்; உயர்ந்த கதைகள்; கவர்ச்சியான படங்கள்! நல்ல பதிப்பு; குறைந்த விலே. இவை கண்ணனின் தனிச் சிறப்புக்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வீடர்மணி - ஆர்வி | 1 | 8 | கழுகும்கிளியும்-'சோமசன்மா' | 0 | 8 |
| சந்திரகிரிக்கோட்டை-'ஜஞ' | 1 | 4 | தவளேயும் காளேயும் - 'சோம சன்மா' | 0 | 8 |
| அசட்டுப் பிச்சு - ஆர்வி | 1 | 0 | | | |
| ஜக்கு - ஆர்வி | 0 | 8 | அபாயச் சங்கு - 'நீலம்' | 0 | 8 |
| விளேயும் பயிர் - கி. வா. ஜ. | 0 | 8 | பாரஸீக ரோஜா - ஆர்வி | 0 | 5 |
| விஞ்ஞானம் பேசுகிருர் - பெ.நா.அ. | 0 | 8 | குளிகைத்தீவு - ஆர்வி | 0 | 4 |
| | | | மாஸ்டர் பாலகுமார் - ஆர்வி | 0 | 4 |
| சமர்த்து மைஞ - தி. ஜ. ர. | 0 | 8 | தூங்கும் அழகி - ஆர்வி | 0 | 4 |
| ஏரிக்கரை மாளிகை - 'ஜஞ' | 0 | 8 | நீச்சல் பழக்கம் | 0 | 3 |
| மின்னல் அரக்கன் - 'ஜஞ' | 0 | 8 | கோழி விதைத்த நெல் | 0 | 3 |
| ஜம்பு - ஆர்வி | 0 | 8 | தங்கத்தின் பந்து | 0 | 3 |

கண்ணன் அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு.

---

**கலேமகள் காரியாலயம் மயிலாப்பூர், சென்னே-4**

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 55



# கண்ணன் தீபாவளி மலர்

அத்தனை வாண வேடிக்கைகளையும் மலரிலே கண்டு மகிழலாம்

- ★ பிரபலமான ஆசிரியர்களின் கதைகள், கவிதைகள்
- ★ மூவர்ணச் சித்திரங்கள்; வெட்டி ஒட்டும் படங்கள்
- ★ முழுநீளக் கதைகள்; சித்திரக் கதைகள்
- ★ ஹாஸ்யத் துணுக்குகள்

**எல்லாம் நிறைந்த மலர் கண்ணன் மலர்**

**விலை 1 ரூபாய்தான்**

இன்றே உங்கள் பிரதிக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்



கண்ணன் ✠ மயிலாப்பூர் ✠ சென்னை-4.